Uva Wellassa University

# වාර්ෂික වාර්තාව - 2014
## ඌව වෙල්ලස්ස විශ්වවිද්‍යාලය

# ஆண்டறிக்கை - 2014
## ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்

# Annual Report - 2014
## Uva Wellassa University




ඌව වෙල්ලස්ස විශ්වවිද්‍යාලය
පස්සර පාර
බදුල්ල

**Uva Wellassa University**
**Passara Road**
**Badulla**

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்
பசறை வீதி
பதுளை

UWU

Uva Wellassa University

# ஆண்டறிக்கை - 2014

## ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 01 | எமது தூரநோக்கு………………………………………………………………….. | 01 |
| 02 | எமது பணிக்கூற்று………………………………………………………................. | 01 |
| 03 | துணைவேந்தரின் செய்தி………………………………………………………………… | 02 |
| 04 | மனித வளங்கள் மற்றும் மாணவர்கள்…………………………………………….…. | 05 |
| 05 | மாணவர் சேர்க்கை பற்றிய விபரங்கள்………………………………………….... | 06 |
| 06 | கல்விசார் பதவியினர் குழாம் பற்றிய விபரங்கள்……………………..…………….…. | 09 |
| 6.1 | 2014 ஆம் ஆண்டிலான கல்விசார் பதவியினர் குழாம் பற்றிய விபரங்கள்….…….. | 09 |
| 6.2 | நூலகப் பதவியினர் ……………..…………………………………………….….…. | 10 |
| 07 | நிருவாக மற்றும் கல்வி சாராப் பதவியினர் குழாம்…………………………..……...... | 10 |
| 7.1 | நிருவாகப் பதவியினர் குழாம்………………………………………………..……. | 10 |
| 7.2 | ஆதரவுப் பதவியினர் (கல்வி சாரா) குழாம்……………………………….……….. | 11 |
| 7.3 | ஆதரவுப் பதவியினரின் பகிர்வு……………………………………….……..………… | 12 |
| 08 | ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் வெளியீடுகள்…………………………..……………... | 13 |
| 09 | நிகழ்வுத் திட்டங்கள் கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள்……………………….. | 13 |
| 10 | கிடைக்கப்பெற்ற விருதுகள் பற்றிய விபரங்கள்…………………………………….. | 13 |
| 11 | மீண்டுவரும் செலவினம் பற்றிய விபரங்கள்…………………………….....……… | 14 |
| 12 | மூலதன செலவினம் பற்றிய விபரங்கள் ……………………….……………….. | 14 |
| 13 | கருத்திட்டம் (உள்நாட்டு, வெளிநாட்டு நிதியுதவி பற்றிய விபரங்கள்)…….….……… | 14 |
| 14 | கருத்திட்ட செலவினம் (உள்நாட்டு, வெளிநாட்டு நிதியுதவி குறித்த விபரங்கள்)……. | 15 |
| 15 | நிதிசார் முன்னேற்றம் (செலவினம் ) பற்றிய விபரங்கள் …………………………. | 15 |
| 16 | நிதிசார் முன்னேற்றம் (வருமானம் ஈட்டப்பெற்ற) பற்றிய விபரங்கள் ………….……. | 15 |
| 17 | நிதிசார் செயலாற்றுகைப் பகுப்பாய்வு– 2014……………………………………. | 16 |
| 18 | 2014 ஆம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகள் பற்றிய விபரங்கள்……………………………..…………………………….…….……. | 16 |
| 19 | 2014 டிசம்பரில் உள்ளவாறு நிதிசார் நிலைமைக் கூற்று…………………..………. | 17 |
| 20 | 2014 டிசம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த வருடத்திற்கான நிதிசார் செயலாற்றுகைக் கூற்று………………………………………………..……..... | 18 |
| 21 | 2014 டிசம்பர் 31ஆம் திகதியன்று முடிவடைந்த வருடத்திற்கான காசுப் பாய்ச்சல் கூற்று……………………………………………………………..……..……….. | 19 |
| 22 | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை………………………………………...……. | 20 |
| 23 | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைக்கான பதில்கள்…………..…………..……. | 37 |

## 1. எமது தூர நோக்கு

2016 ஆம் ஆண்டுக்கு முன்னர் இலங்கையின் மூலவளத் தளத்துக்குப் பெறுமதிகூட்டுவதில் அறிவிலும் நிபுணத்துவத்திலும் புகழ்பெற்ற ஒரு மையமாகத் திகழ்தல்

## 2. எமது பணிக் கூற்று

உள்நாட்டு மூலவளத் தளத்துக்குப் பெறுமதி கூட்டுதலுக்கு மிகுந்த முக்கியத்துவமளிக்கின்ற ஆராய்ச்சியிலும் கற்றலிலும் முதன்மைநிலை அடைந்தும் பட்டப்படிப்பு, பட்டப்பின்படிப்பு, சிறப்புத்துறை, கூட்டாண்மைத்துறை மற்றும் தொடர்கின்ற கல்விச் சந்தைகள் ஆகியவற்றினுள் பொருளாதார அபிவிருத்திக்கு விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அணுகுமுறைகளைப் பயன்படுத்தும் ஆற்றலிலுள்ள தொழில்நுட்ப அணுகுமுறைகளைப் பயன்படுத்தும் ஆற்றலுள்ள முழு நிறைவான தலைவர்களை உருவாக்குதலும்.

## 3. துணைவேந்தரின் செய்தி

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகமானது, இலங்கையின் 14ஆவது தேசிய பல்கலைக்கழகமாக 2005 ஜூன் முதலாம் திகதியன்று தாபிக்கப்பட்டது. நாட்டின் பொருளாதார அபிவிருத்தி குறித்த கேள்வியை பூர்த்திசெய்வதற்கான பல்கலைக்கழகமொன்றை கட்டியெழுப்புவதற்கான பரிசோதனையாகவே இது கருதப்படுகின்றது. தொழில் முனைப்புத் திறன்கள் மற்றும் ஈடுசெய் செயல்திறன்கள் கொண்ட பட்டதாரிகளை உருவாக்குதலைக் குறியாகக் கொண்ட இப் பல்கலைக்கழகம் நவீன கல்விசார் எண்ணக்கருக்களுடனான பாரம்பரிய பல்கலைக்கழக முறைமையினின்றும் வேறுபட்டு மிளிர்கின்றதெனலாம்.

தேசிய அபிவிருத்தி நோக்கிய பயனுறுதிமிக்க நடவடிக்கைகளைக் கோரும் சமூகத்திற்கு எமது இளமைமிக்க தொழில் முயற்சியாளர்கள் முகம் கொடுத்து நிபுணத்துவம் மிக்கவர்களாக மாறத்தக்க வகையில் நாம் அவர்களுக்கு அதிசிறந்த, சாத்தியமான அனைத்தையும் வழங்கி வருகின்றோம். அவர்களே இந்த எண்ணக்கருவின் கனிகளாக விளங்குவதுடன், இலங்கை உயர்கல்வி முறைமை பற்றிய சாதித்து ஆய்தல் நடவடிக்கையின் வெற்றிகரமான இறுதி உருவாக்கமுமாவர். பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டு வருடங்கள் பல கடந்த நிலையில், அந்த சாதித்து ஆய்தல் செயற்பாட்டின் பலனை எம்மால் இன்று உண்மையாக மதிப்பிடக் கூடியதாகவுள்ளது

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகமானது, அதிசயிக்கத்தக்க வகையில் காண்போர் மனங்களைக் கவர்ந்திழுக்கும் வண்ணம் பரந்த காட்சியுடன் கூடிய மலைச்சாரலில் அமைந்துள்ள பதுளை மாநகரின் இதயப் பகுதியில் 59 ஏக்கர் நிலப் பரப்பில் வியாபித்துள்ளது.

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் மூன்று பீடங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

**1. விலங்கு விஞ்ஞான, ஏற்றுமதி விவசாய பீடம்**

i. விலங்கு விஞ்ஞானம்
ii. ஏற்றுமதி விவசாயம்
iii. தேயிலைத் தொழில்நுட்பமும் பெறுமதி சேர்ப்பும்
iv. நீரியல் வளங்கள் மற்றும் தொழில் நுட்பம்
v. பனை மற்றும் இறப்பர்பால் தொழில்நுட்பம் மற்றும் பெறுமதி சேர்ப்பும்

**2. விஞ்ஞான, தொழில்நுட்பப் பீடம்**

i. விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்
ii. கணினி விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்

iii. கைத்தொழில் தகவல் தொழில்நுட்பம்

iv. கனிப்பொருள் வளங்களும் தொழில்நுட்பமும்

**3. முகாமைத்துவப் பீடம்**

i. தொழில் முயற்சியாண்மையும் முகாமைத்துவமும்

ii. விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் நிகழ்வுகள் முகாமைத்துவம்

மாணவர்களின் தொடர்பாடல் திறன்களை விருத்தி செய்வதற்கான கட்டாய நிகழ்வுத் திட்டங்கள் கிடைக்கப்பெறும் நிலையில் உள்ளன.

2013-2018 காலப்பகுதிக்கான செயற்திட்டத்துடன் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டுள்ள கூட்டாண்மைத் திட்டத்தின் (Corporate plan) முன்னேற்றத்தைக் கண்காணிப்பதற்கென விசேட கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது. கூட்டாண்மைத் திட்டத்தை வருடம் முழுவதும் மீளாய்வு செய்வதற்கான கண்காணிப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழகத்தின் பிரதான நோக்கங்களை அடைவதற்கென விருத்திசெய்யப்பட வேண்டிய பின்வரும் பிரதான விடயப் பரப்புக்களை இனங்கண்டுள்ளது.

- தேசிய மற்றும் பூகோள சம்பந்தப்பட்ட பல்வேறு துறைகளில் தரம் வாய்ந்த இளமானிப் பட்டக் கற்கை நிகழ்வுத் திட்டங்களை வழங்குதல்.
- பட்டதாரி மாணவர்களுக்கான தொழில் முனைப்புத் திறன்களை வழங்குதல்.
- பட்டதாரி மாணவர்களின் ஆங்கில மற்றும் தகவல் தொழில் நுட்பத் திறன்களை மிகுதிப்படுத்தல்.
- பட்டதாரிகளின் வேலைவாய்ப்பு மற்றும் எதிர்காலப் பலாபலன்களை விருத்தி செய்தல்.
- பட்டதாரி மாணவர்களின் மென்திறன்களை விருத்திசெய்தல்.
- விளையாட்டு மற்றும் உடற்கல்விச் செயற்பாடுகளை மேம்படுத்தல்.
- தரம் வாய்ந்த பட்டப்படிப்பின் கல்வி நிகழ்வுத் திட்டங்களை அறிமுகப்படுத்தல்.
- ஊழியர்களின் திறமைகள் மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவற்றை விருத்திசெய்தல்.

குறித்த பீடங்கள் செயல் திட்டத்தில் தெளிவுறக் காட்டப்பட்டுள்ள செயற்பாடுகளை நடைமுறைப் படுத்துவதற்கான பல்வேறு நடவடிக்கைகளை தாமாகவே எடுத்துள்ளன. அதன் பிரகாரம் தற்போதுள்ள நிகழ்வுத்திட்ட பாடவிதான மீட்டல்களும், புதிய சுற்று நிருபங்களை அறிமுகப்படுத்தலும், பட்டப்படிப்பு நிகழ்வுத் திட்டத்தின் தரத்தை விருத்திசெய்யும் பொருட்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

நன்கு நிருவகிக்கப்பட்டு வரும் விடுதி வசதிகள் மூலம் கணிசமான எண்ணிக்கை கொண்ட மாணவர்கள் பயனடைந்ததுடன், அவர்களின் கற்கைகளுக்கான நல்லதோர் சூழலும் அமைந்துள்ளதெனலாம். பல்கலைக்கழகமானது, வதிவிடப் பல்கலைக்கழகமொன்றுக்குத்

தேவையான அனைத்து வசதிகளையும் வழங்குவதன் மூலம் கலாசார மற்றும் ஒழுக்க விழுமியங்களை மாணவர் மனங்களில் பதிய வைப்பதற்கான தகுந்த சூழலொன்றை விருத்தி செய்திட முயன்று வருகின்றது. அனைத்து கல்விசார் உத்தியோகத்தர்களும் கல்விச் செயற்பாடுகள், ஆராய்ச்சி மற்றும் கூட்டாண்மை சமூகப் பொறுப்புடைமைகள் ஆகிய மூன்று அடுக்குச் சேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியவர்களாகவுள்ளனர்.

பல்கலைக்கழகத்தில் உள்ள பதவியினர் அபிவிருத்தி மத்திய நிலையமானது (Staff Development Centre) பல்கலைக் கழகத்தில் இணைந்து கொள்ளும் இளம் கல்விசார் பதவியினரைப் பயிற்றுவிக்கும் கடைப்பாட்டினைக் கொண்டுள்ளது. ஆராய்ச்சியாளர்கள் பாதீட்டு நெருக்கடிகளுக்கான கண்டறிதல்களை ஆராய்ச்சி சமூகத்திற்கு முன்னளிக்கை செய்து தங்கள் தொழிலை ஆரம்பிக்கும் பொருட்டு, குறுகிய காலப் பகுதி ஒன்றுக்குள் ஆராய்ச்சி அமர்வுகள் நடாத்தப்பட்டு வருகின்றன. பல்கலைக்கழக ஆராய்ச்சியானது தேசிய வளங்கள் அபிவிருத்தி மற்றும் சமூக சேமநலம் ஆகியவற்றுக்கு நேரடியாகவே பங்களிப்பை வழங்கி வருகின்றதெனலாம்.

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் தூர நோக்கு மற்றும் பணி இலக்கு ஆகியவை தெளிவாக உள்ளதுடன், அவற்றை அக்கறையுடையோர் அனைவரும் நன்கு அறிந்தே வைத்துள்ளனர். கூட்டாண்மைத் திட்டத்தில் வெவ்வேறு செயற்பாடுகளுக்கென அனைத்துப் பொறுப்புடைமைகளும் தெளிவாக இனங்காணப்பட்டுள்ளதுடன், பல்கலைக்கழகத்தினால் நிதிசார் வளங்கள் பயனுறுதிமிக்க வகையில் பயன்படுத்தப்பட்டும் வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கலாநிதி. ஜீ. சந்திரசேன<br>
துணைவேந்தர்<br>
ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்

## 4. மனித வளங்கள் மற்றும் மாணவர்கள்


| பீடம் | கற்கை நெறி | மாணவர்கள் மொத்த எண்ணிக்கை | கல்விசார் பதவியினரின் மொத்த எண்ணிக்கை | கல்விசாராப் பதவியினரின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| விலங்கு விஞ்ஞானம் மற்றும் ஏற்றுமதி விவசாயம் | விலங்கு விஞ்ஞானம் | 178 | 57 | அனைத்து மூன்று பீடங்கள் மற்றும் பொது நிருவாகம் ஆகியவற்றினால் பகிர்ந்துகொள்ளப்பட்டவர்களாக 82 கல்விசாராப் பதவியினரும் 16 நிருவாகப் பதவியினரும் இருந்தனர். |
| | ஏற்றுமதி விவசாயம் | 160 | | |
| | தேயிலை தொழில்நுட்பம் மற்றும் பெறுமதி சேர்ப்பும் | 144 | | |
| | நீரியல் வளங்கள் தொழில்நுட்பம் | 160 | | |
| | பனை மற்றும் இறப்பர்பால் தொழில்நுட்பம் மற்றும் பெறுமதி சேர்ப்பும் | 138 | | |
| விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் | விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் | 190 | 54 | |
| | கணினி விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் | 208 | | |
| | கைத்தொழில் தகவல் தொழில்நுட்பம் | 177 | | |
| | கனிப்பொருள் வளங்கள் மற்றும் தொழில்நுட்பம் | 157 | | |
| முகாமைத்துவம் | தொழில் முயற்சியாண்மை மற்றும் முகாமைத்துவம் | 200 | 27 | |
| | விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் நிகழ்வுகள் முகாமைத்துவம் | 199 | | |
| **மொத்தம்** | | **1911** | **138** | |

## 5. மாணவர்கள் சேர்க்கை விபரங்கள்


ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு பட்டப்படிப்பு நிகழ்வுத் திட்டத்திற்குமென 55 மாணவர்களை உள்ளீர்த்து வருகின்றது. அவர்கள் க.பொ.த (உயர்தர) பரீட்சையிலும், ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்பெற்ற பொது உளச்சார்பு பரீட்சையிலும் காண்பித்த திறமையின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டனர்.

| பீடம் | கற்கைநெறி | மொழி மூலம் | 1ஆம் வருட மாணவர்கள் (2012/2013) | 2ஆம் வருட மாணவர்கள் (2011/2012) | 3ஆம் வருட மாணவர்கள் (2010/2011) | 4ஆம் வருட மாணவர்கள் (2009/2010) | பட்டதாரிகளின் எண்ணிக்கை (2008/2009) |
|---|---|---|---|---|---|---|---|
| விலங்கு விஞ்ஞானம் மற்றும் ஏற்றுமதி விவசாயம் | விலங்கு விஞ்ஞானம் | ஆங்கிலம் | 50 | 47 | 44 | 37 | 50 |
| | ஏற்றுமதி விவசாயம் | | 42 | 44 | 37 | 37 | 37 |
| | தேயிலை தொழிற்நுட்பம் மற்றும் பெறுமதி சேர்ப்பும் | | 39 | 23 | 41 | 41 | 44 |
| | நீரியல் வளங்கள் தொழில்நுட்பம் | | 44 | 34 | 40 | 42 | 47 |
| | பனை மற்றும் இறப்பர்பால் தொழில்நுட்பம் மற்றும் பெறுமதி சேர்ப்பும் | | 33 | 24 | 45 | 36 | 39 |
| விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் | விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் | | 51 | 50 | 43 | 46 | 35 |
| | கணினி விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் | | 49 | 67 | 48 | 44 | 39 |
| | கைத்தொழில் தகவல் தொழில்நுட்பம் | | 49 | 38 | 45 | 45 | 40 |
| | கனிப்பொருள் வளங்கள் மற்றும் தொழில்நுட்பம் | | 45 | 32 | 42 | 43 | 36 |
| முகாமைத்துவம் | தொழில்முயற்சியாண்மை மற்றும் முகாமைத் முகாமைத்துவமும் | | 53 | 52 | 49 | 49 | 47 |
| | விருந்தோம்பல் சுற்றுலாத் துறை மற்றும் நிகழ்வுகள் முகாமைத்துவம் | | 49 | 55 | 47 | 47 | 32 |
| **மொத்தம்** | | | **504** | **466** | **481** | **460** | **444** |

2014 ஆம் ஆண்டிற்கான புதிதாக சேர்க்கப்பட்ட மாணவர்களின் பால்நிலைப் பகிர்வு (2012/2013 பிரிவு)



## 2014 ஆம் ஆண்டில் பட்டம்பெற்ற மாணவர்களின் பால்நிலைப் பகிர்வு (2008/2009 பிரிவு)



## 6. கல்விசார் பதவியினர்

### 6.1. 2014ஆம் ஆண்டில் சேவையாற்றிய கல்விசார் பதவியினர் பற்றிய விபரங்கள்

| பீடம் | விடயப் பரப்பு | மொழி மூலம் | சிரேஷ்ட பேராசிரியர்கள் | பேராசிரியர்கள் | சிரேஷ்ட விரிவுரையாளர்கள் | விரிவுரையாளகள் | தகுதிகாண் விரிவுரையாளர்கள் | தற்காலிக விரிவுரையாளர்கள் / வழிப்படுத்துநர்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| விலங்கு விஞ்ஞானமும் ஏற்றுமதி விவசாயமும் | விலங்கு விஞ்ஞானம் | ஆங்கிலம் | - | - | 07 | 03 | 29 | 18 |
| | நீரியல் வளங்கள் தொழில்நுட்பம் | | | | | | | |
| | தேயிலை தொழிற்நுட்பம் மற்றும் பெறுமான சேர்ப்பும் | | | | | | | |
| | பனை தாவரப்பால் தொழில்நுட்பம் மற்றும் பெறுமாக சேர்ப்பும் | | | | | | | |
| | ஏற்றுமதி விவசாயம் | | | | | | | |
| விஞ்ஞானமும் தொழில்நுட்பம் | விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பம் | | - | - | 9 (2) | 02 | 18 | 23 |
| | கணினி விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் | | | | | | | |
| | கைத்தொழில் தகவல் தொழில்நுட்பம் | | | | | | | |
| | கனிப்பொருள் வளங்கள் மற்றும் தொழில்நுட்பம் | | | | | | | |
| முகாமைத்துவம் | தொழில் முயற்சியாண்மை மற்றும் முகாமைத்துவமும் | | - | - | 05 | 05 | 11 | 06 |
| | விருந்தோம்பல் சுற்றுலாத்துறை மற்றும் நிகழ்வுகள் முகாமைத்துவம் | | | | | | | |
| | பரந்தளவிலான பொதுக் கல்வி மற்றும் அத்தியாவசிய திறன்கள் | ஆங்கிலம் / சிங்களம் /தமிழ் | | | | | | |
| **மொத்தம்** | | | **-** | **-** | **21 (02)** | **10** | **58** | **47** |

தற்காலிக சிரேஷ்ட விரிவுரையாளர்கள் அடைப்புக் குறிகளினுள் () காட்டப்பட்டுள்ளனர்

## 6.2. நூலகப் பதவியினர்

**திருமதி. கே.எம்.ஆர்.கே. குலதுங்க**, BA (பேராதனை), தொலைக் கல்வியில் பட்டப்பின் டிப்ளோமா (இந்தியா), MLISc (டில்லி). உதவி நூலகர் (25.07.2013 தொடக்கம் கற்கை விடுப்பில் உள்ளார்)

**திருமதி. டி.பீ.சீ. விதான,** Bsc (ஸ்ரீ ஜெயவர்த்தனபுர) – உதவி நூலகர்

**திரு. T. பிரதீபன்,** BEcon (கிழக்குப்பல்கலைக்கழகம்), M.Sc LI (இந்தியா)- உதவி நூலகர் (01.12.2013 தொடக்கம் கற்கை விடுப்பில் உள்ளார்)

**திருமதி. எஸ்.எஸ். ஜோஹொரன்** Bsc (சப்ரகமுவ)

# 7. நிருவாக மற்றும் கல்விசாராப் பதவியினர்

## 7.1. நிருவாகப் பதவியினர்

2014ஆம் ஆண்டிற்கான ஒவ்வொரு பதவி வகையிலும் சேவையாற்றிய நிருவாகப் பதவியினரின் எண்ணிக்கை பின்வருமாறு

| **பதவி வகை** | **பதவியின் எண்ணிக்கை** |
|---|---|
| பதிவாளர் | 01(ஒப்பந்த அடிப்படையில்) |
| சிரேஷ்ட உதவிப் பதிவாளர் | 02 |
| சிரேஷ்ட உதவி நிதியாளர் | 04 |
| சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர் | 01 |
| உதவிப் பதிவாளர் | 03 |
| உதவி நிதியாளர் | - |
| பல்கலைக்கழக மருத்துவ அலுவலர் | 01 |
| கருத்திட்ட முகாமையாளர் (ஒப்பந்த அடிப்படையில்) | 01 |
| தலைமை பாதுகாப்பு அதிகாரி | 01(ஒப்பந்த அடிப்படையில்) |
| ஏனைய | 02 |
| மொத்தம் | **16** |

நிதியாளர், பிரதம பாதுகாப்பு அலுவலர் மற்றும் உடற்கல்விப் பணிப்பாளர் ஆகிய பதவிகள் வெற்றிடங்களாக இருந்தன.

## 7.2. ஆதரவுப் பதவியினர் (கல்வி சாரா) குழாம்

தொழில்நுட்ப ஆலுவலர்களின் சேவைகள் தவிர்ந்த எழுது வினைஞர் மற்றும் அதனையொத்த தரங்களைச் சேர்ந்த பதவி அணியினரின் அனைத்து சேவைகளும் செயற்பாட்டு உதவியாளர்களாக(operations Assistant) உரித்தீட்டு அடிப்படையில் (Assignment basis) பின்னர் நியமிக்கப்பட்ட பயிலுநர்கள் மூலம் பெறப்பட்டன. செயற்பாட்டு உதவியாளர்கள் கணினி தொடர்பான பணி, எழுத்துப்பணி, செயற்பபாட்டுப்பணி மற்றும் செயலகப் பணி உள்ளிட்ட பெருமளவிலான செயற்பாடுகளைப் பூர்த்தி செய்து வருகின்றனர். ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகமானது செயற்பாட்டு வெற்றியை இலக்காகக் கொண்டே நடத்தப்பட்டதுடன், செயற்பாட்டு உதவியாளர்கள் தங்கள் திறன்களைக் காண்பித்தும் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் மூலோபாய வெற்றியை நிரூபித்துள்ளனர்.

அனைத்து நியமனதாரிகளும் ஊவா மாகாணத்தைச் சேர்ந்தவர்களாக இருந்ததுடன், பல்கலைகழகத்திற்கு அருகாமையில் வசித்தும் வருகின்றனர். அனைத்து கல்விசாரா மற்றும் ஆதரவுப் பதவி அணியினரின் வகை மற்றும் எண்ணிக்கை ஆகியவை கீழே தரப்பட்டுள்ளன.

| பதவி வகை | பதவியினர் எண்ணிக்கை |
|---|---|
| தொழிற்நுட்ப அலுவலர் | 02 |
| கணினி பிரயோகங்கள் உதவியாளர் (CAA) (அமைய) | 04 |
| செயற்பாட்டு உதவியாளர்கள் (உரித்தீட்டு அடிப்படையில்) | 20 |
| பயிலுநர்கள் | 54 |
| களஞ்சியக் காப்பாளர் | 01 |
| காசாளர் | 01 |

மேலும் உப விடுதிக் காப்பாளர்கள் இருவர் மற்றும் விளையாட்டு அலுவலர் ஒருவரினதும் சேவைகள் வெளியக சேவை வழங்குநர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டன.

## 7.3. ஆதரவுப் பதவியினரின் பகிர்வு

| **பீடம்/கிளை** | **அதி சிரேஷ்ட** | **சிரேஷ்ட பதவியினர் கணினி பிரயோகங்கள் உதவியாளர்** | **கனிஷ்ட பதவியினர் (பயிலுநர்)** | **சிற்றூழியர்கள்** |
|---|---|---|---|---|
| துணைவேந்தர் அலுவலகம் | - | 02 | - | எவருமில்லை* |
| பதிவாளர் அலுவலகம் | - | 01 | 01 | |
| மிருக விஞ்ஞான மற்றும் ஏற்றுமதி விவசாய பீடம் | - | 02(01**) | 04 | |
| விஞ்ஞான மற்றும் தொழிற்நுட்ப பீடம் | - | 03(01**) | 07 | |
| முகாமைத்துவ பீடம் | - | - | 04 | |
| மாணவர் சேமநலப் பிரிவு | - | 03 | 06 | |
| மனிதவளப் பிரிவு | - | 02 | 02 | |
| பொது நிருவாகப் பிரிவு | - | 03 | 01 | |
| பெறுகைப் பிரிவு | - | 03 | 07 | |
| கணக்காய்வாளர் அலுவலகம் | - | 01 | 03 | |
| சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர் அலுவலகம் | - | 01 | 01 | |
| நிதிசார் பிரிவு | - | 01(02***) | 07 | |
| நூலகம் | - | 01 | 07 | |
| மருத்துவ நிலையம் | - | 01 | 01 | |
| கருத்திட்ட உதவிகள் | - | - | 03 | |
| **மொத்தம்** | - | **28** | **54** | |

* பல்கலைக்கழக சிற்றூழியர் எவரையும் நியமிக்கவில்லை, சிற்றூழியர்களின் சேவைகள் சேவை வழங்குநர்களிடமிருந்தே பெற்றுக் கொள்ளப்பட்டன.

** தொழில் நுட்ப உதவியாளர்கள் (02)

*** இளங்காசாளர் மற்றும் களஞ்சியக் காப்பாளர் (02)

## 8. ஆராய்ச்சி, புத்தாக்கங்கள் மற்றும் வெளியீடுகள்

2014ம் வருட காலத்திலான பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி, புத்தாக்கங்கள் மற்றும் வெளியீடுகள் பற்றிய விபரங்கள்

| விடயம் | வெளியிடப்பட்டவை | வணிகமயப் படுத்தப்பட்டவை | முன்னளிக்கை செய்யப்பட்டவை |
|---|---|---|---|
| ஆராய்ச்சிக் கற்கைகள் எண்ணிக்கை | 105 | - | 59 |
| புத்தாக்கங்கள்/ உற்பத்தி அபிவிருத்தி எண்ணிக்கை | 14 | - | 05 |
| பருவ இதழ் கட்டுரைகள் எண்ணிக்கை | 34 | - | - |
| நூல்கள்/ நூல் அத்தியாயங்கள் எண்ணிக்கை | 09 | - | 01 |
| கட்டுரைச் சுருக்கங்கள் | 99 | - | 37 |
| சுவரொட்டிகள் | 20 | - | 21 |
| **மொத்தம்** | **281** | **-** | **123** |

## 9. நிகழ்வுத் திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள்

| விடயம் | பங்கேற்பு / வழங்கப்பட்டவை | பூரணப்படுத் தப்பட்டவை | முன்னளிக்கை செய்யப்பட்டவை |
|---|---|---|---|
| பல்கலைக்கழகப் பட்ட நிகழ்வுத் திட்டங்களின் எண்ணிக்கை | 42 | 13 | - |
| சான்றிதழ் நிகழ்வுத் திட்டங்களின் எண்ணிக்கை | 09 | 11 | 01 |
| சமுதாய சேவை வழங்கல் நிகழ்வுத் திட்டங்களின் எண்ணிக்கை | 35 | 28 | 23 |
| பதவியினர் அபிவிருத்தி கத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் | 50 | 14 | 03 |
| **மொத்தம்** | **136** | **66** | 27 |

## 10. கிடைக்கப் பெற்றுள்ள விருதுகள் பற்றிய விபரங்கள்

| **விடயம்** | **விருதுகள் எண்ணிக்கை** | **கல்விசார் பதவியினர் எண்ணிக்கை** | **மாணவர்கள் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| உள்நாட்டு விருதுகள் | 05 | - | - |
| சர்வதேச விருதுகள் | 07 | - | - |
| **மொத்தம்** | **12** | **-** | **-** |

## 11. மீண்டுவரும் செலவினம் பற்றிய விபரங்கள்

ரூபா

| விடயம் | 2014 | 2013 |
|---|---|---|
| அ. தனிநபர் வேதனாதிகள் | 159,510,038 | 121,219,347 |
| ஆ. பிரயாணம் | 1,484,599 | 1,957,928 |
| இ. வழங்கல்கள் | 9,223,701 | 9,467,163 |
| ஈ. பராமரிப்பு | 2,962,331 | 1,817,403 |
| உ. ஒப்பந்த சேவைகள் | 119,325,799 | 112,870,761 |
| ஊ. ஏனையவை | 18,602,963 | 17,578,202 |
| **மொத்தம்** | **311,109,431** | **264,910,804** |

## 12. மூலதன செலவினம் பற்றிய விபரங்கள்

ரூபா

| விடயம் | 2014 | 2013 |
|---|---|---|
| அ. நிலம் கையகப்படுத்துகை | 5,350,000 | - |
| ஆ. தளபாட மற்றும் ஏனைய உபகரணக் கையகப்படுத்துகை | 12,773,206 | 73,806,688 |
| இ. இயந்திராதிகள் கையகப்படுத்துகை | 20,281,326 | 2,447,744 |
| ஈ. கட்டடங்கள் மற்றும் கட்டமைப்புக்கள் கையகப்படுத்துகை | 116,769,530 | 184,604,627 |
| உ. ஏனையவை | 3,062,770 | 2,978,366 |
| **மொத்தம்** | **158,236,832** | **263,837,425** |

## 13. கருத்திட்ட (உள்நாட்டு/ வெளிநாட்டு நிதியீட்டம்) விபரங்கள்

ரூபா.மில்லியன்

| பெயர்/ விபரங்கள் | கடன்/ மானியம் | நிதியளிப்பு முகவரமைப்பு # | TCE | RFA | DF |
|---|---|---|---|---|---|
| ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக கருத்திட்ட கட்டம் 1 மற்றும் 2 ஆகியவற்றின் ஸ்தாபகம் | - | - | 3,420.00 | - | ✓ |
| **மொத்தம்** | - | - | **3,420.00** | - | - |

## 14. கருத்திட்ட செலவினம் (உள்ளூர் / வெளிநாட்டு நிதியீட்டம்)

ரூபா.மில்லியன்

| பெயர் | TCE | 2014இல் ஏற்பட்ட செலவினம் | 2013இல் ஏற்பட்ட செலவினம் | 31.12.2014இல் உள்ளவாறான ஒட்டு மொத்த செலவினம் | % பௌதிக முன்னேற்ற சதவீதம் |
|---|---|---|---|---|---|
| ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக கருத்திட்ட, கட்டம் 1 மற்றும் 2 ஆகியவற்றின் ஸ்தாபகம் | 3,420.00 | 184.60 | 70.80 | 1,900.50 | 63% |
| **மொத்தம்** | 3,420.00 | 184.60 | 70.80 | 1,900.50 | 63% |

## 15. நிதிசார் முன்னேற்றம் பற்றிய விபரங்கள் (செலவினம்)

ரூபா

| விடயம் | 2014இல் ஏற்பாடு ரூபா | 2014இல் செலவினம் ரூபா | சேமிப்புக்கள்/ (மிகை) |
|---|---|---|---|
| அ. கருத்திட்டம் தவிர்ந்த மீண்டுவரும் செலவினம் | 376,000,000 | 311,109,431 | 64,890,569 |
| ஆ.கருத்திட்டம் தவிர்ந்த மூலதன செலவினம் | 146,500,000 | 87,434,919 | 59,065,081 |
| இ. கருத்திட்டம் உள்நாட்டு நிதியீட்டம் செலவினம் | 83,500,000 | 70,801,913 | 12,698,087 |
| ஈ. கருத்திட்டம், வெளிநாட்டு நிதியீட்டம் செலவினம் | - | - | - |
| **மொத்தம்** | **606,000,000** | **469,346,263** | **136,653,737** |

## 16. நிதிசார் முன்னேற்றம் (உருவாக்கப்பட்ட வருமான விபரங்கள்)

ரூபா

| வருமான வழிகள் | 2014இல் ஏற்பாடு | 2014இல் சேகரிப்பு | பற்றாக்குறை / மிகை |
|---|---|---|---|
| அ. பட்டப்படிப்புக்கள் (விடுதி மற்றும் பதிவுக் கட்டணங்கள் முதலியன) | 14,550,000 | 11,809,344 | 3,190,656 |
| ஆ. பட்டப்பின் படிப்புக்கள் | - | - | - |
| இ. ஆலோசனை வழங்கல் (பயிற்சி, பரீட்சை மற்றும் ஏனையவை) | 450,000 | 343,400 | 343,400 |
| ஈ. ஏனையவை | - | - | - |
| **மொத்தம்** | **15,000,000** | **12,152,744** | **3,534,056** |

## 17. நிதிசார் செயலாற்றுகைப் பகுப்பாய்வு – 2014

ரூபா

| விடயம் | சூத்திரம் | செலவினம் |
|---|---|---|
| அ. மாணவர் ஒருவருக்கான மீண்டுவரும் செலவினம் (மீ.செ) | மீ.செ/மாணவர் எண்ணிக்கை | 240,948 |
| ஆ. மாணவர் ஒருவருக்கான மூலதன செலவினம் (மீ.செ) | மீ.செ/மாணவர் எண்ணிக்கை | 83,282 |
| **மொத்தம்** | | **324,230** |

* (தேய்மானம் மற்றும் மாணவர்களுக்கான நிதியுதவி உட்பட)

## 18. 2014ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற உட்கட்டமைப்பு வசதிகள் குறித்த விபரங்கள்

| உட்கட்டமைப்பு விபரங்கள் | செலவினம் (ரூபா) | பௌதிக முன்னேற்றம் |
|---|---|---|
| கட்டடத்தொகுதி "E" வலையமைப்பு | 627,849 | 100% |
| விளையாட்டு நிலையம் | 16,847,858 | 10% |
| சாலைகள் மற்றும் வீதிகள் Def பகுதி | 4,285,875 | 100% |
| சாலைகள் மற்றும் வீதிகள், சிற்றுண்டிச்சாலை, மலசலகூடம் | 3,294,557 | 100% |
| படைப்பகம், சிற்றுண்டிச்சாலை மற்றும் மலசலகூடம் | 5,390,000 | 100% |
| Senate கட்டிடம் | 23,504,043 | 65% |
| பல்கலைக்கழக விருந்தினர் விடுதி | 6,947,806 | 100% |
| தனிப்பொருட் சேமக் கட்டிடத் தொகுத் பராமரிப்பு | 8,331,970 | 85% |

## 19. 2014 டிசெம்பரில் உள்ளவாறான நிதிநிலைமை குறித்த கூற்று

| | 2014<br>ரூபா. | 2013<br>ரூபா. |
|---|---|---|
| **சொத்துக்கள்** | | |
| **நடைமுறைச்சொத்துக்கள்** | | |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவையும் | 8526,006 | 1,335,207 |
| முதலீடுகள் | 12,554,808 | 2,633,737 |
| கிடைக்கப் பெறக்கூடியவை | 10,464,501 | 11,900,961 |
| சொத்துப் பதிவேடுகள் | 3,162,310 | 5,431,453 |
| முற்பணங்கள் | 113,744 | 198,262 |
| | 34,821,369 | 21,499,620 |
| **நடைமுறையற்ற சொத்துக்கள்** | | |
| கிடைக்கப் பெறக்கூடியவை | 6,417,887 | 5,602,480 |
| சொத்து, இயந்திர சாதன மற்றும் உபகரணம் | 1,508,243,648 | 1,290,305,122 |
| வளர்ச்சிகண்டுவரும் பணி | 167,994,886 | 365,641,418 |
| காணி சுவீகரிப்பு | 58,366,399 | 53,016,399 |
| தர முன்னேற்றக் கருத்திட்டங்கள் | 2,476,396 | 1,206,090 |
| | 1,743,499,217 | 1,715,771,510 |
| **மொத்த சொத்துக்கள்** | 1,778,320,586 | 1,787,271,130 |
| **பொறுப்புக்கள்** | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | |
| அட்டுறு செலவுகள் | 16,613,210 | 39,129,463 |
| நானாவித கடன் வழங்குநர்கள் மற்றும் ஏனையோர் | 87,920,015 | 111,221,850 |
| | 104,533,225 | 150,351,313 |
| **நடைமுறையற்ற பொறுப்புக்கள்** | | |
| தாமதப்படுத்தப்பட்ட வருமானம் | 159,021,600 | 133,457,306 |
| பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் | 7,722,914 | 6,813,256 |
| | 166,744,514 | 140,270,562 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | 271,277,739 | 290,621,875 |
| | 1,507,042,847 | 1,446,649,255 |
| **நிகர சொத்துக்கள்** | | |
| **நிகர சொத்துக்கள் /சம உரிமையாண்மை** | | |
| ஒட்டுமொத்த நிதி (மூலதனம்) | 1,940,711,050 | 1,831,042,417 |
| பொது ஒதுக்கம் | (452,282,559) | (394,580,896) |
| விசேட ஒதுக்கம் | 1,897,846 | 1,830,484 |
| விசேட மூலதனங்கள் (நிதிகள்) | 16,716,509 | 8,357,250 |
| **மொத்த நிகர சொத்துக்கள்/ சம உரிமையாண்மை** | 1,507,042,847 | 1,446,649,255 |

## 20. 2014 டிசெம்பர் 31இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிசார் செயலாற்றுகைக் கூற்று

| | 2014<br>ரூபா | 2013<br>ரூபா |
|---|---|---|
| **வருமானம்** | | |
| மீண்டுவரும் மூலதனம் | 326,702,000 | 203,000,000 |
| உதவிக் கொடுப்பனவும் மஹாபொல மானியங்களும் | 15,368,900 | 21,108,150 |
| சுய நிதி நிகழ்வுத்திட்ட வருமானம் | 343,400 | 553,000 |
| ஏனைய வருமானம் | 11,809,374 | 13,191,742 |
| நிலைமாறக்கூடிய மூலதன மானியங்கள் | 43,767,073 | 40,788,873 |
| **மொத்த வருமானம்** | **397,990,747** | **278,641,765** |
| **செலவுகள்** | | |
| ஆளணி வேதனாதிகள் | 159,510,038 | 121,219,347 |
| பிரயாணச் செலவுகள் | 1,484,599 | 1,957,928 |
| வழங்கல்கள் | 9,223,701 | 9,467,163 |
| பராமரிப்பு | 2,962,331 | 1,817,403 |
| ஒப்பந்தம்சார் செலவினம் | 119,325,799 | 112,870,761 |
| ஏனைய மீண்டு வரும் செலவுகள் | 18,602,962 | 17,578,202 |
| சுயநிதி நிகழ்வுத்திட்ட செலவுகள் | - | 418,496 |
| மாணவர் உதவு தொகை மற்றும் மஹாபொல கொடுப்பனவுகள் | 15,368,900 | 21,08,150 |
| தேய்மானம் | 131,324,532 | 115,616,976 |
| **மொத்தச் செலவுகள்** | **457,802,863** | **402,054,426** |
| **காலப்பகுதிக்கான மிகை/பற்றாக்குறை** | (59,812,116) | (123,412,661) |

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்

## 21. 2014 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான காசுப் பாய்ச்சல் கூற்று

| | 2014 | 2013 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| **இயங்குநிலைச் செயற்பாடுகளில் இருந்தான காசுப் பாய்ச்சல்கள்** | | |
| சாதாரண செயற்பாடுகளில் இருந்தான பற்றாக்குறை /மிகை | (59,812,116) | (123,412,661) |
| **காசு நகர்வுகள் சேராதவை** | | |
| நிலைமாற்றமுற்ற மூலதன மானியங்கள் | (43,767,073) | (40,788,873) |
| தேய்மானம் | 131,324,532 | 115,616,976 |
| ஏற்பாடுகள் மற்றும் ஏனையவை | 2,923,544 | 2,294,002 |
| W/C யிலான மாற்றங்களுக்கு முன்னரான இயங்கு நிலை இலாபம் | **30,668,887** | **46,290,557** |
| மூலதனம் (அதிகரிப்பு/குறைவு) | (9,921,070) | |
| கிடைக்கப்பெற வேண்டியவையிலான (அதிகரிப்பு/குறைவு) (CA) | 1,436,459 | 4,710,833 |
| கிடைக்கப்பெற வேண்டியவையிலான (NCA)- (அதிகரிப்பு/குறைவு) | ( 815,407) | (920,023) |
| சொத்துப்பதிவேடுகளிலான (அதிகரிப்பு/குறைவு) | 2,269,143 | (2,572,671) |
| முற்பணத்திலான (அதிகரிப்பு/குறைவு) | 84,518 | 102,263 |
| அட்டுறு செலவவுகளிலான (அதிகரிப்பு/குறைவு) | 22, 352,323 | 31,289,875 |
| நானாவித கடன் வழங்குநர்களில் ஏற்பட்ட (அதிகரிப்பு/குறைவு) | 23,301,835 | 11,312,047 |
| **இயங்குநிலை செயற்பாடுகளில் இருந்தான நிகர காசுப்பாய்ச்சல்கள்** | **(21,931,628)** | **(2,572,758)** |
| முதலீட்டுச் செயற்பாடுகளில் இருந்தான நிகர காசுப் பாய்ச்சல்கள் | | |
| நிலையான சொத்துக்கள் கையகப்படுத்துகை | (158,236,832) | (264,756,547) |
| **முதலீட்டுச் செயற்பாடகளில் இருந்தான நிகர காசுப் பாய்ச்சல்கள்** | (158,236,832) | (264,756,547) |
| **நிதியீட்டுச் செயற்பாடுகளில் இருந்தான காசுப் பாய்ச்சல்கள்** | | |
| ஒட்டுமொத்த நிதி | 109,668,633 | 187,350,674 |
| தாமதப்படுத்தப்பட்ட வருமானம் | 69,331,367 | 66,649,326 |
| ஏனைய நிதிகள் | 8,359,260 | 5,235,103 |
| **நிதியீட்டுச் செயற்பாடுகளில் இருந்தான நிகர காசுப் பாய்ச்சல்** | **187,359,260** | **259,235,103** |
| காசு மற்றும் காசுக்கு சமமானவற்றிலான நிகர அதிகரிப்பு/ குறைவு | 7,190,799 | (8,094,203) |
| குறித்த காலப்பகுதி தொடக்கத்திலான காசும் காசுக்குச் சமமானவைகளும் | 1,335,207 | **9,429,410** |
| **காலப்பகுதி முடிவிலான காசும் காசுக்குச் சமமானவையும்** | **8,526,006** | **1,335,207** |

**குறிப்பு - 31.12.2014 அன்று உள்ளவாறான வங்கிக் கணக்கு மீதிகள்**

| வங்கி | கணக்கு இலக்கம் | தொகை (ரூபா) |
|---|---|---|
| இலங்கை வங்கி | 3114820 | 2,819,475 |
| இலங்கை வங்கி | 3114828 | 4,307,897 |
| மக்கள் வங்கி | 10100168384805 | 1,398,635 |
| மொத்தம் | | **8,526,006** |

## 22. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

யூவி/பிடி/டீ/2014/64
ஒக்டோபர் 2015

உபவேந்தர்,

இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்.

**இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் 2014 திசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டிற்கான கணக்குகள் 1978 இன் 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(2) மற்றும் 1971 இன் 38ஆம் இலக்க 14(2)(சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

---

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் 2014 திசெம்பர் 31ஆம் திகதியுடன் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978இன் 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 107(1) மற்றும் (111)ஆம் பிரிவுமற்றும் 1971இன் 38ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயகசோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1)ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108 (2)ஆம் பிரிவின் பிரகாரமும் நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் இவ்வறிக்கை விநியோகிக்கப்படுகின்றது. எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றது.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாய பூர்வமாக சமர்ப்பித்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லதுதவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் நியாய பூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டினை திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் நடாத்திச் செல்லல், பொருத்தமான கணக்கீட்டு கொள்கைகளைத் தெரிவுசெய்தல் மற்றும் பிரயோகித்தல், சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான முறையில் கணக்கீட்டு மதிப்பீடுகளைத் தயாரித்தல் என்பன இப் பொறுப்புக்களுக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1.3 **கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்திற்கானஅடிப்படையும்**

---

கணக்காய்வுப் பரிசோதனைகளின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தை வெளியிடுவது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினது மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தது. நிதிக்கூற்றுக்கள் பொருட்படுத்தக்கூடிய பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதை நியாயபூர்வமாக உத்தரவாதம் செய்யும் வகையில் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கேற்ப கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் முகாமைத்துவம் கடைப்பிடித்த கணக்கீட்டுக் கோட்பாடுகள் மற்றும் முக்கிய மதிப்பீடுகள், நிதிக்கூற்றுக்களது ஒட்டுமொத்தச் சமர்ப்பணம் மீதான மீளாய்வு என்பவற்றைக் கணக்காய்வு உள்ளடக்கியது. எனது உயர் அறிவுக்கும் நம்பிக்கைக்கும் அமைய, கணக்காய்வு நடவடிக்கைகளுக்குத் தேவையான போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்கள் என்பன பெறப்பட்டன என்றும் அதற்கமைய, எனது அபிப்பிராயத்திற்கான போதியளவு அடிப்படை எனது கணக்காய்வின் மூலம் வழங்கப்பட்டது எனவும் நான் நம்புகின்றேன். 1971இன் 38ஆம் இலக்க நிதிஅதிகாரச் சட்டத்தின் 13ஆம் பிரிவின்(3) மற்றும் (4)ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைகழகத்தின் 2014 டிசம்பர் 31இல் உள்ளவாறான நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும், நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிரயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படாத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு அவதானிக்கப்பட்டது.

(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02

I. காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டிய சொத்துக்கள் கையேற்பதற்காக கிடைத்த 187,359,260 தொகை நிதிச் செயற்பாடுகளின் கீழ் கணக்கீடு செயற்பட்டிருந்தது.

II. மீளாய்வாண்டின் காசுப்பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள நிலையான சொத்துக்களை விலைக்கு கொள்வனவு செய்வதற்குரிய காசு வெளிபாய்ச்சல் ரூபா 158,236,832 தொகை அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 09

I. மீளாய்வாண்டின் இறுதியில் எழுதுகருவி இருப்பினுள் 2009 ஆம் ஆண்டில் அச்சிடப்பட்ட பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத ரூபா 116,895 கிரயத்திலான 293 மாணவர் கைநூல்கள் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், அவ்வாறான இருப்பு மதிப்பீடு செய்தல் தொடர்பான கணக்கீட்டு கொள்கை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைகழகத்தினால் அட்டுறு அடிப்படையில் கணக்கு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்குரிய செலுத்த வேண்டிய செலவினம் ரூபா 2,925,867 தொகையும் கிடைக்க வேண்டிய வருமானம் ரூபா 266,104 தொகைக்காக தேவையான நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டில் செலுத்த வேண்டிய வெளிவாரி பாடநெறிக் செலவினங்களுக்காக ரூபா 345,000 மிகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்குரிய ரூபா 181,070 தொகையான செலவினம் மிகை

ஒதுக்கீட்டில் பதிவழிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் செலவினம் தொடர்பாக வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) மீண்டுவரும் செலவின விடயங்களிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 305,023 கூட்டுத் தொகையான மூலதனப் பொருட்கள் மீளாய்வாண்டின் டிசம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமைக்கூற்றில் ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்களின் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் பட்டோலைகளுடன் ஒப்பிடும் போது கிடைக்க வேண்டிய மஹபொல என்பவற்றிற்கிடையே முறையே ரூபா 660,671 தொகை மற்றும் ரூபா 765,100 தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. மேலும் முன்னைய ஆண்டிலிருந்து முன்கொண்டு வரப்படும் இனங்காணப்படாத பெறவேண்டிய மாணவர் உதவிப் பணம் ரூபா 170,321 உள்ளடக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள பின்வரும் ரூபா 4,408,295 கூட்டுப்பெறுமதியான 04 கணக்கு விடயங்கள் தொடர்பாக அவற்றிற்கு எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்கு விடயம் | பெறுமதி ரூபா | | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|---|
| I. | மீளச்செலுத்த வேண்டிய வைப்புக்கள் | 1,997,840 | i. | காலப்பகுப்பாய்வு |
| II. | மீளச்செலுத்த வேண்டிய பாதுகாப்பு வைப்புக்கள் | 647,953 | ii. | தனிப்பட்ட மீதிப் பட்டியல் |
| III. | பொது வைப்புக்கள் மீண்டெழும் | 1,524,607 | iii. | வைப்புப் பதிவேடு |
| IV. | பொது வைப்புக்கள் மூலதனம் | 237,895 | | |
| | **மொத்தம்** | **4,408,295** | | |

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

பின்வருமாறு அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 ஜனவரி முதல் யூலை வரையான காலப்பகுதிக்காக மீளளிப்புச் செய்யும் அடிப்படையில் பேராதனைப் பல்கலைகழகத்தின் பேராசிரியர் ஒருவருக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 93,546 தொகையான ஆராய்ச்சிக் கொடுப்பனவு அறிவிடப்பட்டிருக்கபடவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் டிசம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 7,179,806 தொகையான இடர் கடன் மீதியில் 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளின் போது 02 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 165,183 கூட்டுத்தொகையான இடர் கடன் மீதிகளின் அறவீடுகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டின் டிசம்பர் 31இல் உள்ளவாறு ரூபா 96,000 தொகையான விழா முற்பணக் கடன் மீதியில் 2010,2011 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் ஏப்ரல் மாதத்தின் போது 03 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 10,000 தொகையான விழா முற்பணக் கடன் மீதிகள் அறவீடுகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

(ஈ) 2006 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பல்கலைகழகத்தின் நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொள்ளும் மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்திற்கு (CECB) செலுத்த வேண்டிய ரூபா 61,989,351 ஆன அளவை தீர்வு செய்வதற்கு போதியளவு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணக்கமின்மை

பின்வரும் இணக்கமின்மைகளை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| அ) 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டம் | |
| i. 37(1) ஆம் பிரிவு | குழு நிர்ணயித்த தெரிவு செய்யும் |

| | |
|---|---|
| | குழுவொன்றின் பரிந்துரையின் அடிப்படையில் நிர்வாக சபையினால் பல்கலைக்கழகமொன்றின் பதிவாளர் நியமிக்கப்பட வேண்டிய போதிலும், நிர்வாக சபையின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு உபவேந்தரால் பணிப்பொறுப்பு அடிப்படையில் ஓய்வுபெற்ற பதிவாளர் ஒருவர் அப்பதவிக்காக நியமிக்கப்பட்டிருந்தார். |
| ii. 108(3)(2) ஆம் பிரிவு | கணக்காய்வாரள் தலைமை அதிபதியின் அறிக்கை அனுப்பியதன் பின்னர் 3 மாதங்களுக்கு அவ்வறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட அல்லது எடுப்பதற்கு உத்தேசித்துள்ள நடவடிக்கையை கணக்காய்வாளா்ர தலைமை அதிபதிக்கு அறிவிக்க வேண்டிய போதிலும் 2013ஆம் ஆண்டின் கணக்காய்வாளரால் தலைமை அதிபதிக்கு அறிக்கை தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1971இன் 38ஆம் இலக்க நிதி அதிகார சட்டத்தின் 14(1) ஆம் பகுதி | மீளாய்வாண்டின் போது வரைவு ஆண்டறிக்கையின் பிரதியொன்று கண்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 1985இன் முதலாம் இணைக்க ஊழியர் சேமலாப நிதிய (திருத்திய) அதிகார சட்டத்தின் 1958இன் ஆம் 15ம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகார சட்டத்தின் 10ம் பிரிவு மற்றும் 1980 இன் 46ம் இலக்க (ஊழிய நம்பிக்கை நிதிய) அதிகார சட்டம் | ஏற்பாடுகளின் பிரகாரம் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக எழுதுவினைஞர் மற்றும் அதுக்கு சமமான தரங்களில் கடமை புரிகின்ற 28 பயிலுனர்களுக்காக பங்களிப்புத் தொகை நிதியத்துக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ஈ) 1978 டிசம்பர் 19ம் திகதி 842 ஆம் இலக்க திறைச்சேரி சுற்றறிக்கை | மீளாய்வாண்டின் டிசம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,100,000,044 பெறுமதியான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களிற்காக நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று முறையாக பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) 2003 யூன் 3ம் திகதி பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் 7.1 மற்றும் 7.2 ஆம் பிரிவுகள் | பல்கலைகழகத்தின் பிரதான செயற்பாட்டு துறையை மேவுகை செய்யும் வகையில் செயற்பாட்டு கைநூலொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை . |
| (ஊ) 2008 ஜனவரி 1ம் திகதி 1530/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியால் திருத்தப்பட்ட 2006 இன் 12ம் இலக்க முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) அதிகாரசட்டத்தின் 3ம் பிரிவு | கொடுப்பனவு பெறுமதி ரூபா 25,000 இற்கு மேற்பட்ட கொடுப்பனவிற்காக ரூபா 25 ஆன முத்திரை கட்டணம் அறவிடப்பட வேண்டிய போதிலும் தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் 16 சந்தர்ப்பங்களின் ரூபா 1,019,661 கூட்டுத்தொகையான கொடுப்பனவுகள் தொடர்பாக கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (எ) 2011 பெப்ரவரி 21ம் திகதி 449 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | பணிப்பொறுப்பு அடிப்படையிலான நியமனங்கள் 45 நாட்களை விஞ்சாத மற்றும் பணிப்பொறுப்பொன்றுக்கு செலுத்தக் கூடிய ஆகக்கூடிய தொகை ரூபா 30,000 ஆக இருந்த போதிலும் அதற்கு முரணாக பணிப்பொறுப்பு அடிப்படையில் மூன்று ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களுக்கு சுற்றறிக்கை ஏற்பாடுகளை மிகைத்து செலுத்தப்பட்ட ரூபா 718,539 தொகைக்காக அரச நிதி திணைக்களத்தின் முன் அங்கீகாரம் |

| | |
|---|---|
| | பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஏ) பல்கலைகழக மானியங்கள் ஆனைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களிற்கான தாபனக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் முதலாம் பிரிவு மற்றும் நிதிப்பிரமாணம் 758 | மீளாய்வாண்டிற்காக நியமிக்கப்பட்ட காலப்பகுதியில் வருடாந்த பரிசோதனைக்கு மேலதிகமாக களஞ்சிய பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |
| (ஐ) 2010 பெப்ரவரி 5ம் திகதி 920 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆனைக்குழுவின் சுற்றறிக்கையின் 5(viii) ஆம் பந்தி | சம்பள பரிமாற்றம் மேற்கொள்ளப்படும் போது 26 பேராசிரியர்களுக்குரிய பிணைப்பொறுப்பு திருத்தம் செய்யபட்டிருக்கபடவில்லை. |
| (ஒ) 2013 ஆகஸ்ட் 29ம் திகதி 12/2013 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆனைக்குழு தலைவரின் தாபனசுற்றறிக்கை | சிரேஷ்ட உத்தியோகத்தர்களுக்குரிய தனியாள் வீடுகளில் குடியிருப்போரிட மிருந்து வீட்டு வாடகை சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஓ) பல்கலைக்கழக மானியங்கள் ஆனைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்காக தாபனக்கோவையின் ஏ ஆம் அத்தியாயத்தின் 7.6 ஆம் பந்தி | பிணைப்பொறுப்பு மற்றும் உடன்படிக்கை ஒப்பந்தம் மீறியமை தொடர்பாக இரண்டு விரிவுரையாளர்களிடம் இருந்து ரூபா 8,220,772 தொகை பல்கலைக்கழகத்திற்கு அறவிட வேண்டியிருந்தது. |

## 3. நிதிமீளாய்வு

### 3.1 நிதிவிளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிகூற்றுக்களின் பிரகாரம் 2014 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக பல்கலைகழகத்தின் நிதி விளைவுகள் ரூபா 59,812,116 பற்றாக்குறையாக இருந்ததுடன் இதனோட ஒத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 123,412,661 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 63,600,545 தொகையான அதிகரிப்பு காணப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அ) மீளாய்வாண்டின் போது 1900 மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட கிரயம் ரூபா 457,802,863 ஆக இருந்ததுடன் ஒரு மாணவனுக்கான கிரயம் ரூபா 240,949 ஆகக் காணப்பட்டது. இதற்கு ஒப்பாக முன்னைய ஆண்டில் 1423 மாணவர்களின் கல்வி கிரயம் ரூபா 401,635,931 ஆக காணப்பட்டதுடன் ஒரு மாணவனுக்கான கிரயம் ரூபா 282,246 ஆக காணப்பட்டது. இதன் படி முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் ஒரு மாணவனுக்கான கிரயம் ரூபா 41,297 ஆல் குறைவடைந்திருந்தது.

ஆ) மீளாய்வாண்டில் நாட்டின் பல்கலைக்கழகங்களின் 1:17 என்ற சராசரி விரிவுரையாளர்கள் மாணவ விகிதத்திற்கு ஒப்பாக பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்கள் மாணவ விகிதம் 1:16 ஆக இருந்தது.

இ) கூட்டினைத்த திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக 605 மாணவர்களை இணைத்து கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 507 மாணவர்கள் மாத்திரம் அனுமதிக்கப்பட்டிருந்தனர். அதன் பிரகாரம் எதிபார்க்கப்பட்ட எண்ணிக்கையில் 98 மாணவர்கள் அதாவது 16 சதவீத குறைவொன்று தென்பட்டது.

ஈ) 2013 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் சுயமான வருமான உழைப்பு பாடநெறிகளை நடாத்தியமையால் உழைத்த வருமானம் 37 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

### 4.2 முகாமைத்துவ செயல்திறனின்மை

05/0183/035/001 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரத்தின் கீழ் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழத்தை ஸ்தாபிப்பதற்காக 2008 பெப்ரவரி 10ம் திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போது கைத்தொழில் அமைச்சிற்குரிய காணியை உயர்கல்வி அமைச்சுக்கு கையேற்பதற்காக எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்திற்காக தற்போது எடுக்கப்பட்டுள்ள 30.9667 ஹெக்டேயர் காணியில் உரித்தை பல்கலைக்கழகத்திற்கு சட்ட ரீதியாக கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 நிதியத்தின் பயன்பாடு:**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அ) மீளாய்வாண்டின் திருத்திய பாதீட்டு மதிப்பீட்டில் இருந்து மூலதனச் செலவினத்திற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 230,000,000 தொகையான ஏற்பாட்டிலிருந்து ரூபா 71,763,168 தொகை சேமிக்கப்பட்டிருந்தது. அது மூலதன நிதி ஏற்பாட்டின் 31 சதவீதம் ஆகும்.

ஆ) தகவல் தொழிநுட்ப அபிவிருத்தி, மாணவ மையப்படுத்திய கற்பித்தல், முயற்சியாளர்களின் திறன் அபிவிருத்தி, வியாபார மதியுரை அலகு மற்றும் புதிய உற்பத்தி பொருள் போன்ற 05 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 7,000,000 தொகையான மொத்த ஏற்பாடும் எசலவிடப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது.

இ) ஆராய்ச்சிகளை ஊக்கப்படுத்துவதற்காக மீளாய்வாண்டின் போது பாதிடப்பட்ட மூலதன ஏற்பாடான ரூபா 25,000,000 தொகையில் ரூபா 554,266 தொகை மாத்திரமே பயன்பட்டிருந்தது. இதன் பிரகாரம் ரூபா 24,445,734 தொகையான ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்ததுடன் இது மொத்த ஏற்பாட்டில் 98 சதவீதம் ஆகும்.

ஈ) மீளாய்வாண்டின் போது மாவட்ட செயலகம் “பதுளை” இனால் இழைய உற்பத்தி செயற்திட்டத்திறாக வழங்கப்பட்ட ரூபா 3,323,000 தொகை பொது வைப்பு மூலதன கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருக்கும் போதிலும், 2015 மார்ச் 31ம் திகதி வரை செயற்றிட்டம் செயற்படுத்தபடவில்லை.

**4.4 சிக்கனமற்ற கொடுக்கல், வாங்கல்**

மீளாய்வாண்டில் ஒவ்வொரு மாதமும் வெளிவாரி பாடநெறிகளில் இருந்து உழைத்த வருமானத்தில் ரூபா 10 இலட்சம் தொகையொன்று நடைமுறைக் கணக்கு இருந்த போதிலும் அது முதலீடு செய்யப்பட்டு வட்டியை உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.5 விளைவற்றதும் குறைபயன்பாடுடையதுமான சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அ) 2010 யூன் 30ம் திகதி கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 322,560 பெறுமதியான 05 தீக் காப்பு பெட்டகங்கள் மீளாய்வாண்டின் டிசம்பர் 31 இல் உள்ளவாறு பயன்பாட்டிற்கு எடுத்து கொள்ளப்படாது விளைவற்று காணப்பட்டன.

ஆ) 2012 ஆம் ஆண்டின் போது பொறியியல் வேலைதளத்திற்கான கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 14,060,480 பெறுமதியான 3-Axis CNC இயந்திரம் மீளாய்வாண்டின் டிசம்பர் 31 இல் உள்ளவாறு பயன்பாட்டிற்கு எடுத்து கொள்ளப்படாது விளைவற்று காணப்பட்டது.

இ) வெளிவாரி பாடநெறிப்பிரிவிற்கு ரூபா 1,117,933 பெறுமதியான நிலையான சொத்துக்கள் உயர்கல்வி அமைச்சின் “HETC” செயற்றிட்டத்தினூடாக வழங்கப்பட்டிருந்த போதிலும், அச் சொத்துக்கள் ஆக்கபூர்வமாக வெளிவாரிப்பாடநெறிப்பிரிவின் நோக்கங்களைக் நிறைவேற்றுவதற்கு பயன்படுத்தபடாது இருந்தமை அவதானிக்கப்பட்டது.

ஈ) பல்கலைக்கழகத்தின் நிதிப்பிரிவின் நிர்வாக நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்காக 2013 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 222,768 பெறுமதியான மின் பொருள் தற்போது காசோலை அச்சிட்காக மாத்திரம் பயன்படுத்தப்படுகின்றமை காணக்கூடியதாக இருந்தது.

### 4.6 வெளிப்படையான மோசடிகள்

மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்ட பட்டமளிப்பு விழாவை புகைபடம் எடுப்பதற்காகவும், காணொளி படுத்துவதற்கும் உரிய வழங்குனர் தெரிவு செய்தல் தொடர்பாக கொள்வனவு வழிபாட்டின் கோவையின் 2.8.5, 5.2.1(அ), 6.3.2, 6.3.3, 6.3.3.1(அ) வழிகாட்டிற்கு முரனாக நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், வழிகாட்டியின் 1.21 இல் குறிப்பிட்ட நோக்கங்கள் மற்றும் வழிகாட்டியின் 1.4 இல் குறிப்பிடப்பட்ட ஒழுங்கு விதி மீறப்பட்டிருந்தது. அவ்வாறே தெரிவு செய்யப்பட்ட வழங்குனரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த விலை விபரங்களின் பிரகாரம் 10”x12” அளவிலான புகைப்படம் ஒன்று ரூபாய் 100 ஆக குறிப்பிட்டிருந்த போதிலும், பட்டதாரி அபேட்சகர்களுக்கு புகைப்படம் ஒன்று ரூபா 336 என்னும் தொகைக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது உறுதிபடுத்தப்பட்டது. அதன் பிரகாரம் ரூபா 104,784 தொகை முறையற்ற விதத்தில் உழைப்பதற்கு பல்கலைக்கழகத்தினால் உதவி ஒத்தாசை வழங்கப்பட்டிருந்தது. மேலும் இது தொடர்பாக உரித்து மற்றும் உரிமை பல்கலைக்கழகத்தின் வசமிருந்த போதிலும்,

இந்த உரித்து தொடர்பாக பல்கலைக்கழக நிதியத்திற்கு எந்தவொரு அறவீடொன்றையும் பெற்றுக்கொள்வதற்று நடவடிக்கை எடுக்கபட்டிருக்கவில்லை.

### 4.7 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

அ) 2008 ஆம் ஆண்டின் போது ஆடைக்கைத்தொழில் கட்டிடத்திற்காக ரூபா 41,247,644 தொகை செலவு செய்து நவீனமயப்பட்டிருந்த போதிலும், கூரையால் நீர் கசிவு ஏற்பட்ட காரணத்தினால் சிவிலிம் சிதைவடைந்து காணப்பட்டதுடன், மேற்படி கட்டிடத்தின் கூரை மீளாய்வாண்டின் ஜனவரி – ஏப்ரல் காலப்பகுதியிலும் புணரமைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

ஆ) நிர்மாண செயற்திட்டங்கள் தயாரிக்கப்பட்டதன் பின்னர் தேவையான அளவீட்டுப்பத்திரங்கள் (BOQ) தயாரிப்பதை சரிப்படுத்த இயலுமாக இருந்த போதிலும், தொடர்ந்தும் மத்திய பொறியியலாளர் உசாத்துணை பணியகத்தினால் (CECB) அளவீட்டுப் பத்திரங்கள் (BOQ) தயாரிக்கும் போது செலவின விடயங்களில் 50 சதவீதத்திலிருந்து 300 சதவீதம் வரை மதிப்பீடுகளில் உள்ளவறான பெறுமதிகளுக்கிடையே வேலைகளை நிறைவேற்றும் போது விலகல் அவதானிக்கப்பட்டன.

இ) 2010 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டு 2013 ஆம் ஆண்டின் போது வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டிய 12 நிர்மாண செயற்திட்டங்கள் மீளாய்வாண்டு வரையிலும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையால் மதிப்பிடப்பட்ட கிரயத்தை மிகைப்பதை குறைப்பது சிக்கலான விடயம் ஒன்றாக இருந்தது.

### 4.8 மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

அ) மீளாய்வாண்டின் டிசம்பர் 31 இல் உள்ளவாறு பல்கலைக்கழத்தின் அங்கீகரிக்கப்பட்ட கல்விசார் பதவியணியின் 213 பதவிகளில் 70 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை.

ஆ) 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகார சட்டத்தின் vi ஆம் பகுதியின் 33ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் நூலக பதவி 2006ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை வெற்றிடமாக காணப்பட்டது.

இ) பதிவாளர் பதவி 2014 மார்ச் 12ம் திகதி முதல் வெற்றிடமாக காணப்பட்டதுடன், 1978 இன் 16ம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகார சட்டத்தின் 37(1) பிரகாரம் அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்று பல்கலைகழகம் தவறியிருந்தது.

ஈ) மீளாய்வு ஆண்டின் டிசம்பர் 31இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட கல்விசாரா பதவியணியின் 113 பதவிகளில் 70 பதவிகளின் வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்கு தவறியிருந்தது.

உ) பல்கலைக்கழத்தில் 32 ஆய்வு கூடங்கள் காணப்பட்ட போதிலும், மீளாய்வாண்டில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் 12 பதவிகளில் 10 பதவிகளை பூர்த்தி செய்வதற்கு தவறியிருந்தது.

ஊ) 2002 ஜனவரி 8 ஆம் திகதி 794ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆனைக்குழு சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆகக்குறைந்த தகமைகளுக்கு முரணான 2008 டிசம்பர் 5ம் திகதி UGC/HR/1/2/452 ஆம் இலக்க நியமன கடிதத்தின் பிரகாரம் சிரேஸ்ட உதவி பதிவாளர் பதவிக்காக ஆட்சேர்ப்பிற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

எ) கல்விசார் பதவியணியினருக்குரிய 5 விரிவுரையாளர்களின் நியமனக்கடிதத்தின் பிரகாரம் நியமனத்தை நிரந்தரமாக்குவதற்கு நியமன திகதியிலிருந்து ஓராண்டு காலப்பகுதியில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய கற்றல்/ கற்பித்தல் முறைகள், திறன்கள் உட்பட ஊழியர் அபிவிருத்தி பயிற்சி பாடநெறி பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

ஏ) 1982 ஏப்ரல் 6ஆம் திகதி 166 ஆம் இலக்க பல்கலைக்கழக மானிய ஆனைக்குழு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கல்விசார் பதவியணியினருக்கு விரிவுரையாளர்களை நியமிப்பதற்கு உரித்தாக நடாத்தப்படும் நேர்முகப்பரீட்சை குழுவின் அங்கத்தவராக பல்கலைக்கழகத்தின் பதிவாளர் இருந்தமையால் நான்கு விரிவுரையாளருக்குரிய நியமனம் செல்லுப்படியற்றதாக இருந்தது.

ஐ) பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவி அணியில் புத்தகக் கட்டுணர் பதவி ஒன்று அங்கீகரிக்கபடதிருந்த போதிலும், 2014 யூலை 24ஆம் திகதி 638/2014 ஆம் இலக்க கொள்வனவு குழு தீர்மானத்தின் பிரகாரம் தற்போது பல்கலைகழகத்திற்கு சேவை வழங்கும் நிறுவனத்திலிருந்து புத்தக கட்டுணர் பதவிக்காக இரண்டு ஊழியர்களின் சேவை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

### 4.9 வாகனப் பயன்பாடு

வாகனத்திற்காக ஏற்படுத்தி கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கை பிரகாரம் மாதாந்தம் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட வேண்டிய கிலோமீற்றர் அளவை விட குறைத்து ஓட்டத்தில் ஈடுபடுத்தும் கிலோமீற்றர் அளவுக்கு கொடுப்பனவு செய்வதும் நிபந்தனை ஒன்றாகும். அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது 5 வாகனங்கள் தொடர்பாக ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படாத 29,897 கிலோ மீற்றர்களிற்கான ரூபா 914,878 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிகூற்றுக்களை சமர்ப்பித்தல்

2002 மே 24ஆம் திகதி பீஎப்/பீஈ 21 ஆம் இலக்க அரச நிதிச்சுற்றறிக்கையின் பிரகாரம் 2014 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுகள் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களிற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுகள் 2015 மார்ச் 31ஆம் திகதியே கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

அ) 2014 - 2018 காலப்பகுதிற்குரிய கூட்டிணைந்த திட்டத்தில் மீளாய்வாண்டில் செயற்படுத்தப்பட வேண்டியிருந்த 21 செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

ஆ) 2003 யூன் 02 ஆம் திகதி பீஈடி 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.12 ஆம் பந்தியின் பிரகாரம் முன்னைய மூன்று ஆண்டுகளின் செயற்பாட்டு விளைவுகள் தொடர்பாக மீளாய்வொன்று கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன், நிறைவேற்றப்பட வேண்டிய இலக்குகளின் நிதிப் பெறுமதிகள் காண்பிக்கப்பட்டிராமையால் செயல் முன்னேற்றத்தை மதிப்பிடக்கூடிய முறையில் கூட்டிணைந்த திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 செயல ் நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

அ) மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கை திட்டம் தொடர்பாக மேற்கொண்ட பரிசோதனையின் போது 2014 பெப்ரவரி 17ஆம் திகதி 1.2014 இலக்க அரச நிதிச்சுற்றுகையின் நான்காம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கை திட்டத்துக்கு நான்காவது வரையறுக்கப்பட்ட நிறுவகத்தின் ஒழுங்கமைப்பு கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் தற்போது உள்ள பதவியணியினர் தொடர்பான விபரங்கள் மற்றும் உள்ளக கணக்காய்வு திட்டம் என்பன உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

ஆ) மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பௌதீக செயல் முன்னேற்றத்தை அளவிடுவதற்காக செயலால் செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

இ) கூட்டிணைந்த திட்டத்தினதும் செயல்நடவடிக்கைத் திட்டத்தினதும் பௌதீக முன்னேற்றத்தை அளவிடுவதற்காகவும் அதற்குரிய தீர்மானங்களை எடுப்பதற்காக தந்திரோபாய முகாமைத்துவ மற்றும் அபிவிருத்தி குழுவொன்று தாபிக்கப்பட்டிருந்த போதிலும் அக்குழு மாதாந்தம் கூடி செயல் முன்னேற்றம் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை

**5.4 கணக்காய்வு முகாமைத்துவ குழு கூட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

அ) 2010 டிசம்பர் 17ம் திகதி 55இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை 15ம் பந்தியின் ஆண்டொன்றிக்கு ஆகக் குறைந்தது 4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்கள் கூட்டப்பட வேண்டிய போதிலும் மீளாய் வாண்டில் 2 குழு கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டு இருந்தன.

ஆ) தற்போது கொள்வனவு செய்யப்பட்டுவுள்ள கணனி கணக்கீட்டு முறைமையை நலாவது வரையாக செயற்படுத்துதல், கல்விசாரா பதவியினரை அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் கடமை கையளிப்பு கடிதங்கள் வழங்குதல், கணகாய்வு ஐயவினா பதிவேட்டை பராமரித்தல் மற்றும் கணகாய்வு ஐயவினாகளிற்கு பதிலளித்தல் போன்றவை தொடர்பாக 32 ஆவது கணக்காய்வு குழுதிட்டத்தின் போது எடுக்கப்பட்ட தீர்மானங்களை செயற்படுத்துவதை தாமதம் அவதானிக்கப்பட்டது.

### 5.5 கொள்வனவு திட்டம்

பல்கலைக்கழகத்திற்கு சொந்தமான இணையத்தளம் ஒன்று போதியளவு தகவல் தொழிநுட்ப வசதிகள் இருந்த போதிலும் கொள்வனவு வழிகாட்டி கோவையின் 9.8வழிகாட்டியின் பிரகாரம் இலத்திரனியல் கொள்வனவு நடவடிக்கைகள் இலத்திரனியல் மார்க்கமாக செயற்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை

### 5.6 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

அ) மதிப்பிடப்பட்ட செலவினம், உள்படியான செலவினத்துடன் ஒப்பிட்டு பார்கையில் 5 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளில் 13 சதவீதம் முதல் 61 சதவீதம் வரையான விலகளும் 7 மூலதான செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளில் 15 சதவீம் முதல் 91 சதவீதம் வரையான கருத்திற் கொள்ளப்’பட வேண்டிய விலகளும் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்க பூர்வமான முகாமைத்துவ கட்டுபாடு சாதகனமாக பயன்படுத்தபட்டிராமை அவதானிக்கப்பட்டது.

ஆ) மீளாய்வு ஆண்டின் பாதீட்டு மதிப்பீட்டில் ஊழியர் அபிவிருத்தி மற்றும் பட்டப்படிப்பு அங்கிகள் என்பவற்றை கொள்வனவு செய்வதற்கான மூலதன செலவினத்திற்காக ஏற்பாடு அங்கீகரித்து கொள்லாமல் முறையோர் ரூபா 2,782,153 தொகை மற்றும் ரூபா 94,500 தொகையான செலவினமும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

### 5.7 தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள் தொடர்பான அவதானிப்புகள்

2012 செப்டம்பர் 21ம் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் கணக்குழு கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் படி, கழிவு நீர் மீள் சுழற்சி செயற்றிட்டத்தினை புனரமைப்பதற்கு இது வரை பல்கழைக்கழகம் தவறியிருந்தது.

**06. முறைமைகளும் கட்டுபாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுபாடுகளிலால் ஆன குறைபாடுகள் அவ்வப் போது பல்கலைகழக உபவேந்தரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

அ) சொத்துக்கள் முகாமைத்துவம்

ஆ) களஞ்சிய கட்டுபாடு

இ) நிதி முகாமைத்துவமும் செலவீன கட்டுப்பாடும்

ஈ) மனித வள முகாமைத்துவம்

உ) வாகனப் பயன்பாடு

ஒப்பம் : டபிள்யூ.பீ.சி விக்ரமரத்ன

கணக்காய்வாளர் : தலைமையதிபதி (பதில்)

## 23. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள்

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

| | |
|---|---|
| (அ)<br><br>**(i)** காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டிய சொத்துக்கள் கையேற்பதற்காக கிடைத்த ரூபா 187,359,260 தொகை நிதிச் செயற்பாடுகளின் கீழ் கணக்கீடு செயற்பட்டிருந்தது. | காசுப்பாய்ச்சல் கூற்றில் நிதிச் செயற்பாடுகளின் கீழ் கணக்கீடு செயற்பட்டுள்ள இத்தொகையானது பல்கலைகழக மொத்த நிதிக்கூற்றின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது மற்றும் நீண்ட கால வருமானத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. |
| **(ii)** மீளாய்வாண்டின் காசுப்பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள நிலையான சொத்துக்களை விலைக்கு கொள்வனவு செய்வதற்குரிய காசு வெளிபாய்ச்சல் ரூபா 158,236,832 தொகை அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | காசு உட்பாய்ச்சல் மற்றும் வெளிபாய்ச்சல் காசுப்பாய்ச்சல் வழங்கல் மாதிரிக்கு இணங்க சரியாக காட்டப்பட்டுள்ளது. |
| ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் எழுதுகருவி இருப்பினுள் 2009 ஆம் ஆண்டில் அச்சிடப்பட்ட பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத ரூபா 116,895 கிரயத்திலான 293 மாணவர் கைநூல்கள் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், அவ்வாறான இருப்பு மதிப்பீடு செய்தல் தொடர்பான கணக்கீட்டு கொள்கை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இருப்பு மதிப்பீட்டு சதவீதமானது நிதி அறிக்கையில் பக்கம் 08ல் 2.1இன் கீழ்<br><br>08 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ளது. அத்துடன் இருப்பு மீதான மதிப்பு அதன் பெறுமதியின் மூலம் காட்டப்பட்டுள்ளது. |

### 2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | |
|---|---|
| (அ) பல்கலைகழகத்தினால் அட்டுறு அடிப்படையில் கணக்கு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்குரிய செலுத்த வேண்டிய செலவினம் ரூபா 2,925,867 தொகையும் கிடைக்க வேண்டிய வருமானம் ரூபா 266,104 தொகைக்காக தேவையான நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 31.12.2014ம் திகதி வரைக்கும் மேற்கொள்ளப்படாத அனைத்து அடையாளப்படுத்தப்பட்ட செலவினங்கள் அட்டுறு செலவினமாகவும் மற்றும் அடையாளப்படுத்தபட்ட வருமானங்கள் பெறவேண்டிய வருமானமாகவும் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. |
| (ஆ) முன்னைய ஆண்டில் செலுத்த வேண்டிய வெளிவாரி பாடநெறிக் செலவினங்களுக்காக ரூபா 345,000 மிகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்குரிய ரூபா 181,070 தொகையான செலவினம் மிகை ஒதுக்கீட்டில் பதிவழிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் செலவினம் தொடர்பாக வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நான் ஒப்புக் கொள்கிறேன்.<br><br>வெளிப்படுத்த மற்றும் அதை சரி செய்ய நான் நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) மீண்டுவரும் செலவின விடயங்களிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 305,023 கூட்டுத் தொகையான மூலதனப் பொருட்கள் மீளாய்வாண்டின் டிசம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமைக்கூற்றில் ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்களின் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மேற்கூறப்பட்ட முலதன பொருட்களை ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |
| **2.23.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்** | |
| மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் பட்டோலைகளுடன் ஒப்பிடும் போது கிடைக்க வேண்டிய மஹபொல என்பவற்றிற்கிடையே முறையே ரூபா 660,671 தொகை மற்றும் ரூபா 765,100 தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. மேலும் முன்னைய ஆண்டிலிருந்து முன்கொண்டு வரப்படும் இனங்காணப்படாத பெறவேண்டிய மாணவர் உதவிப் | மேற்கூறப்பட்ட வேறுபாடுகளை சம்மந்தப்பட்ட அட்டவணைகளுடன் ஒப்பீடு செய்வேன் மற்றும் நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

| | |
|---|---|
| பணம் ரூபா 170,321 உள்ளடக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | |

**24.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

| | |
|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள பின்வரும் ரூபா 4,408,295 கூட்டுப்பெறுமதியான 04 கணக்கு விடயங்கள் தொடர்பாக அவற்றிற்கு எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | காலப் பகுப்பாய்வு, தனிப்பட்ட நிலுவைகள் மற்றும் வைப்பு பதிவேடு பட்டியல்களை முன் வைக்க நான் நடவடிக்கை எடுப்பேன். |

| **கணக்கு விடயம்** | **பேறுமதி** ரூபா | **சமர்ப்பிக்கப்படாத சான்றுகள** |
|---|---|---|
| மீளச்செலுத்த வேண்டிய வைப்புக்கள் | 1,997,840 | i. காலப் பகுப்பாய்வு |
| மீளச்செலுத்த வேண்டிய பாதுகாப்பு வைப்புக்கள் | 647,953 | ii. தனிப்பட்ட மீதிப் பட்டியல் |
| பொது வைப்புக்கள் மீண்டெழும் | 1,524,607 | iii. வைப்புப் பதிவேடு |
| பொது வைப்புக்கள் மூலதனம் | 237,895 | |
| மொத்தம் | **4,408,295** | |

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்**

| பின்வருமாறு அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | |
|---|---|
| (அ) 2011 ஜனவரி முதல் யூலை வரையான காலப்பகுதிக்காக மீளளிப்புச் செய்யும் அடிப்படையில் பேராதனைப் பல்கலைகழகத்தின் பேராசிரியர் ஒருவருக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 93,546 தொகையான ஆராய்ச்சிக் கொடுப்பனவு அறவிடப்பட்டிருக்கபடவில்லை. | தொகையை திரும்ப பெறும் பொருட்டு பின்வரும் திகதிகளில் பேராதனை பல்கலைக்கழகத்திற்கு நினைவூட்டல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.<br>1) 05ம் திகதி டிசம்பர் 2013<br>2) 08ம் திகதி ஆகஸ்ட் 2014<br>3) 11ம் திகதி மே 2015<br>அதை திரும்ப அறவிடுவதற்கு நான் நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) மீளாய்வாண்டின் டிசம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 7,179,806 தொகையான இடர் கடன் மீதியில் 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளின் போது 02 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 165,183 கூட்டுத்தொகையான இடர் கடன் மீதிகளின் அறவீடுகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. | Dr. சிவகுருநாதனிடமிருந்து பெறவேண்டிய ரூபா 1682.69 தீர்க்கப்பட்டுள்ளதோடு Dr. திருமதி எஸ் சி வீரசூரியவிடமிருந்து பெறவேண்டிய தொகை சம்மந்தமாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (இ) மீளாய்வாண்டின் டிசம்பர் 31இல் உள்ளவாறு ரூபா 96,000 தொகையான விழா முற்பணக் கடன் மீதியில் 2010, 2011 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் ஏப்ரல் மாதத்தின் போது 03 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 10,000 தொகையான விழா முற்பணக் கடன் மீதிகள் அறவீடுகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. | ஏற்கனவே தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| (ஈ) | 2006 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பல்கலைகழகத்தின் நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொள்ளும் மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்திற்கு (CECB) செலுத்த வேண்டிய ரூபா 61,989,351 ஆன அளவை தீர்வு செய்வதற்கு போதியளவு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பல்கலைகழக நிர்மான திட்டத்தின் பிரிவு 2இல் மிதமிருக்கும் கட்டுமான பணியின் கீழ் இருக்கும் உப திட்டங்கள் சார்பான இங்கு காட்டப்பட்டுள்ளது. மேலும் நிதி விடுதலை செய்யும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படுமிடத்து அவைகளை விடுதலை செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

**2.4. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணக்கமின்மை**

**பின்வரும் இணக்கமின்மைகளை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.**

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு** | **இணக்கமின்மை** | |
|---|---|---|
| அ) 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டம் | | |
| 37(1) ஆம் பிரிவு | குழு நிர்ணயித்த தெரிவு செய்யும் குழுவொன்றின் பரிந்துரையின் அடிப்படையில் நிர்வாக சபையினால் பல்கலைக்கழகமொன்றின் பதிவாளர் நியமிக்கப்பட வேண்டிய போதிலும், நிர்வாக சபையின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு உபவேந்தரால் பணிப்பொறுப்பு அடிப்படையில் ஓய்வுபெற்ற பதிவாளர் ஒருவர் அப்பதவிக்காக நியமிக்கப்பட்டிருந்தார். | பதிவாளர், துனை பதிவாளர் மற்றும் 2 துனை உதவி பதிவாளர் பதவிகள் வெற்றிடமாக உள்ளதால்.மிக்க திறமையான மூத்த நிர்வாக அலுவலராக பல்வேறு அரச பல்கலைக்கழகங்களில் பணியாற்றிய அனுபவமிக்க அலுவலர் பணிப்பொறுப்பு அடிப்படையில் பல்கலைக்கழகத்தை சீராக இயக்கும் எண்ணத்தோடு நியமிக்கப்பட்டுள்ளார். மேலும் நிரந்தர பதிவாளர் நியமிப்புத் தொடர்பாக நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| | | எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. |
| 108(3)(2) ஆம் பிரிவு | கணக்காய்வாரர் தலைமை அதிபதியின் அறிக்கை அனுப்பியதன் பின்னர் 3 மாதங்களுக்கு அவ்வறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட அல்லது எடுப்பதற்கு உத்தேசித்துள்ள நடவடிக்கையை கணக்காய்வாரர் தலைமை அதிபதிக்கு அறிவிக்க வேண்டிய போதிலும் 2013ம் ஆண்டின் கணக்காய்வாரள் தலைமை அதிபதி அறிக்கை தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | நான் கணக்காய்வு அறிக்கையில் எழுதப்பட்ட விடயங்கள் தொடர்பாக உத்தேச நடவடிக்கைகளை உடனடியாக ஒரு அறிக்கையில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்க நடவடிக்கை எடுப்பேன். |

| | | |
|---|---|---|
| (ஆ) 1971இன் 38ம் இலக்க நிதி அதிகார சட்டத்தின் 14(1)ம் பகுதி | மீளாய்வாண்டின் போது வரைவு ஆண்டறிக்கையின் பிரதியொன்று கண்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வரைவு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. அதை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்க நான் நடவடிக்கை எடுப்பேன். |

| | | |
|---|---|---|
| (இ) 1958ன் முதலாம் இணக்க ஊழியர் சேமலாப நிதிய (திருத்திய) அதிகார சட்டத்தின் 1958ன் 15ம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகார சட்டத்தின் 10ம் பிரிவு மற்றும் 1980ன் 46ம் இலக்க (ஊழிய நம்பிக்கை நிதிய) அதிகார சட்டம் | ஏற்பாடுகளின் பிரகாரம் 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக எழுதுவினைஞர் மற்றும் அதுக்கு சமமான தரங்களில் கடமை புரிகின்ற 28 பயிலுனர்களுக்காக பங்களிப்புத் தொகை நிதியத்துக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட சுற்றறிக்கையில் குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு இணங்க பயிற்சிக்கான வாய்ப்பு வழங்கப்பட்டது. மேலும் பங்களிப்பு தொகை வழங்குவது சம்மந்தமான வரையறைகள் பற்றிய அறிவுரை வழங்குமாறு பதுளை தொழிலாளர் நாயகத்திடம் கேட்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| (ஈ) 1978 டிசம்பர் 19ம் திகதி 842 ஆம் இலக்க திறைச்சேரி சுற்றறிக்கை | மீளாய்வாண்டின் டிசம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,100,000,044 பெறுமதியான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களிற்காக நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று முறையாக பேணப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்து பதிவேடு பதிவுகளை நான் முறையாக பேணி வருகிறேன். |

| | | |
|---|---|---|
| (உ) 2003 யூன் 3ம் திகதி பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் 7.1 மற்றும் 7.2 ஆம் பிரிவுகள் | பல்கலைகழகத்தின் பிரதான செயற்பாட்டு துறையை மேவுகை செய்யும் வகையில் செயற்பாட்டு கைநூலொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | நான் விரைவில் பல்கலைகழக பிரதான செயற்பாட்டுத்துறையை உள்ளடக்கும் செயற்பாட்டு கைநூலொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | |
|---|---|---|
| (ஊ) 2008 ஜனவரி 1ம் திகதி 1530/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியால் திருத்தப்பட்ட 2006ன் 12ம் இலக்க முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) அதிகாரசட்டத்தின் 3ம் பிரிவு | கொடுப்பனவு பெறுமதி ரூபா 25,000 இற்கு மேற்பட்ட கொடுப்பனவிற்காக ரூபா 25ஆன முத்திரை கட்டணம் அறவிடப்பட வேண்டிய போதிலும் தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் 16 சந்தர்ப்பங்களின் ரூபா 1,019,661 கூட்டுத்தொகையான கொடுப்பனவுகள் தொடர்பாக கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு தேர்வு கட்டணம் செலுத்தும் போது 25 ரூபா முத்திரை காசு கருத்தில் கொள்ளப்படவில்லை. எதிர்காலத்தில் கொடுப்பனவு பெறுமதி ரூபா 25,000 இற்கு மேற்படும் போது முத்திரை கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | |
|---|---|---|
| | | |
| (எ) 2011 பெப்ரவரி 21ம் திகதி 449ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | பணிப்பொறுப்பு அடிப்படையிலான நியமனங்கள் 45 நாட்களை விஞ்சாத மற்றும் பணிப்பொறுப்பொன்றுக்கு செலுத்தக் கூடிய ஆகக்கூடிய தொகை ரூபா 30,000 ஆக இருந்த போதிலும் அதற்கு முரணாக பணிப்பொறுப்பு அடிப்படையில் மூன்று ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களுக்கு சுற்றறிக்கை ஏற்பாடுகளை மிகைத்து செலுத்தப்பட்ட ரூபா 718,539 தொகைக்காக அரச நிதி திணைக்களத்தின் முன் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சம்மந்தப்பட்ட அதிகாரிகள் அத்தியவசிய சேவைகளை பராமரிக்க பணிப்பொறுப்பு அடிப்படையில் குறிப்பிட்ட அதிகாரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். மேலும் மேலதிக கொடுப்பனவுகள் பல்கலைக்கழக நிர்வாக சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு இணங்க தீர்மானிக்கப்பட்டுள்ளன. |

| | | |
|---|---|---|
| (ஏ) பல்கலைகழக மானியங்கள் ஆனைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களிற்கான தாபனக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் முதலாம் பிரிவு மற்றும் நிதிப்பிரமாணம் 758 | மீளாய்வாண்டிற்காக நியமிக்கப்பட்ட காலப்பகுதியில் வருடாந்த பரிசோதனைக்கு மேலதிகமாக களஞ்சிய பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நான் ஒப்புக்கொள்கிறேன்.<br><br>தாபன விதிக்கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் முதலாம் பிரிவு மற்றும் நிதி பிரமானம் 758 படி இருப்பு ஆய்வுகள் முன்னெடுக்க நடவடிக்கை எடுப்பேன். |

| | | |
|---|---|---|
| (ஐ) 2010 பெப்ரவரி 5ம் திகதி 920ம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆனைக்குழுவின் சுற்றறிக்கையின் 5(viii)ம் பந்தி | சம்பள பரிமாற்றம் மேற்கொள்ளப்படும் போது 26 பேராசிரியர்களுக்குரிய பிணைப்பொறுப்பு திருத்தம் செய்யபட்டிருக்கபடவில்லை. | நான் ஒப்புக்கொள்கிறேன்.<br><br>பிணைப்பொறுப்பு திருத்தம் பற்றிய நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளது.<br><br>மனித வள பிரிவானது ஒரு அனுபவம் நிறைந்த ஊழியர் இல்லாது அலுவலக வேலைகள், செயற்பாட்டு உதவியாளர்கள் மூலமே செய்யப்பட்டு வந்துள்ளன. அதனால் மேற்கூறப்பட்ட செயற்பாடுகள் வினைத்திறனுடனும் வெற்றிகரமாகவும் பூரணப்படுத்த முடியவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஒ) 2013 ஆகஸ்ட் 29ம் திகதி 12/2013 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆனைக்குழு தலைவரின் தாபனசுற்றறிக்கை | சிரேஷ்ட உத்தியோகத்தர்களுக்குரிய தனியாள் வீடுகளில் குடியிருப்போரிடமிருந்து வீட்டு வாடகை சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நான் சம்மந்தப்பட்ட சுற்று அறிக்கைக்கு ஏற்ப செயல்பட ஒப்புக்கொள்கிறேன். |
| (ஓ) பல்கலைக்கழக மானியங்கள் ஆனைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்காக தாபனக் கோவையின் Vஆம் அத்தியாயத்தின் 7.6ஆம் பந்தி | பிணைப்பொறுப்பு மற்றும் உடன்படிக்கை ஒப்பந்தம் மீறியமை தொடர்பாக இரண்டு விரிவுரையாளர்களிடம் இருந்து ரூபா 8,220,772 தொகை பல்கலைக்கழகத்திற்கு அறவிட வேண்டியிருந்தது. | அறவிடபட வேண்டிய தொகையை செலுத்தும்படி வேண்டி கடிதம் மூலம் குறிப்பிட்ட விரிவுரையாளர்கள் எம்.எ.பி.என். பெரெரா வும் இ.கெ.என்.டி பெர்னான்டொ ஆகியோருக்கு அனுப்பபட்டு உள்ளது. மேலும் பல்கலைகழக மனித வள பிரிவுக்கு வேலையாட்கள், அதிகாரிகள் புதிதாக நியமிக்கபட்டுள்ளதால் தகவல் சேகரிப்பதில் கடினம் உள்ளது. |

## 03. நிதிமீளாய்வு

### 3.1 நிதிவிளைவுகள்

| | |
|---|---|
| சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிகூற்றுக்களின் பிரகாரம் 2014 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்காக பல்கலைகழகத்தின் நிதி விளைவுகள் ரூபா 59,812,116 பற்றாக்குறையாக இருந்ததுடன் இதனோடு ஒத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 123,412,661 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 63,600,545 தொகையான அதிகரிப்பு காணப்பட்டது. | முந்தய ஆண்டுடன் ஒப்பீடுகையில் இலக்கை நோக்கிய பல்கலைக்கழக வளர்ச்சி செயற்பாட்டு நடவடிக்கைகள் திறனாக உள்ளது. |

## 04. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

| | |
|---|---|
| அ) மீளாய்வாண்டின் போது 1900 மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட கிரயம் ரூபா 457,802,863 ஆக இருந்ததுடன் ஒரு மாணவனுக்கான கிரயம் ரூபா 240,949 ஆகக் காணப்பட்டது. இதற்கு ஒப்பாக முன்னைய ஆண்டில் 1423 மாணவர்களின் கல்வி கிரயம் ரூபா 401,635,931 ஆக காணப்பட்டதுடன் ஒரு மாணவனுக்கான கிரயம் ரூபா 282,246 ஆக காணப்பட்டது. இதன் படி முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் ஒரு மாணவனுக்கான கிரயம் ரூபா 41,297 ஆல் குறைவடைதிருந்தது. | நான் ஒப்புக்கொள்கிறேன். |
| ஆ)மீளாய்வாண்டில் நாட்டின் | இந் நிலைமைக்கு காரணமாக எங்களது |

| | |
|---|---|
| பல்கலைக்கழகங்களின் 1:17 என்ற சராசரி விரிவுரையாளர்கள் மாணவ விகிதத்திற்கு ஒப்பாக பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்கள் மாணவ விகிதம் 1:16 ஆக இருந்தது. | பல்கலைக்கழகம் வளர்ச்சியின் ஆரம்ப ஆண்டுகளில் ஒன்றாக இருப்பதுடன் தலைநகரில் இருந்து தொலைவில் அமைந்துள்ளது. |
| இ) கூட்டிணைத்த திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக 605 மாணவர்களை இணைத்து கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 507 மாணவர்கள் மாத்திரம் அனுமதிக்கப்பட்டிருந்தனர். அதன் பிரகாரம் எதிபார்க்கப்பட்ட எண்ணிக்கையில் 98 மாணவர்கள் அதாவது 16சதவீத குறைவொன்று தென்பட்டது. | பல்கலைக்கழக மாணவர் அனுமதியானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படுகின்றது. அனுமதிக்கான பொறிமுறையின் ஒரு பகுதியாக எமது பல்கலைக்கழக மாணவர்களுக்கு கிடைக்கப் பெற்ற இடமாற்றீடு காரணமாக வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.<br><br>மேலும் மாணவர் அதிக பெறுபேற்றை எதிர்பார்த்து அனுமதிக்கான பதிவை மேற்கொள்ளாமல் இருப்பதனாலும் வீழ்ச்சி ஏற்படுகின்றது. |
| ஈ) 2013 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் சுயமான வருமான உழைப்பு பாடநெறிகளை நடாத்தியமையால் உழைத்த வருமானம் 37 சதவீதத்தினால் குறைவடைவிருந்தது. | நான் புதிய கற்கைநெறிகள் தொலைத்தூர கல்விப்பிரிவின் கீழ் ஆரம்பிக்கப்படவுள்ளதை மகிழ்ச்சியுடன் தெிவிக்க விரும்புகின்றேன். |

### 4.2 முகாமைத்துவ செயல்திறனின்மை

| | |
|---|---|
| 05/0183/035/001 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரத்தின் கீழ் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழத்தை ஸ்தாபிப்பதற்காக 2008 பெப்ரவரி 10ம் திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போது கைத்தொழில் அமைச்சிற்குரிய காணியை உயர்கல்வி அமைச்சுக்கு கையேற்பதற்காக எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்திற்காக தற்போது | இது தொடர்பாக நீதிமன்ற நடவடிக்கை நிலுவையில் உள்ளது. நான் நீதிமன்ற நடவடிக்கை முடிந்ததும் விரைவில் இடமாற்றம் தொடர்பான நடவடிக்கைகள் எடுப்பேன். |

| | |
|---|---|
| எடுக்கப்பட்டுள்ள 30.9667 ஹெக்டேயர் காணியில் உரித்தை பல்கலைக்கழகத்திற்கு சட்ட ரீதியாக கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | |

**4.3 நிதியத்தின் பயன்பாடு:**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

| | |
|---|---|
| அ) மீளாய்வாண்டின் திருத்திய பாதீட்டு மதிப்பீட்டில் இருந்து மூலதனச் செலவினத்திற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 230,000,000 தொகையான ஏற்பாட்டிலிருந்து ரூபா 71,763,168 தொகை சேமிக்கப்பட்டிருந்தது. அது மூலதன நிதி ஏற்பாட்டின் 31 சதவீதம் ஆகும். | இந்த சேமிப்புக்கு காரணமாக, 2014 ஒக்டோபர் முதல் டிசம்பர் வரை நிலையான சொத்துக்களை பெற கொள்வனவு ஆவணங்கள் அனுப்பிய போதிலும் பரிமாறுபவர்கள் சரியான நேரத்தில் வழங்க தவறி விட்டார்கள். |
| ஆ) தகவல் தொழிநுட்ப அபிவிருத்தி, மாணவ மையப்படுத்திய கற்பித்தல்,முயற்சியாளர்களின் திறன் அபிவிருத்தி, வியாபார மதியுரை அலகு மற்றும் புதிய உற்பத்தி பொருள் போன்ற 05 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 7,000,000 தொகையான மொத்த ஏற்பாடும் எசலவிடப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது. | திட்டமிடப்பட்ட திட்டங்கள் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள காரணத்தால் இந்த ஒதுக்கீட்டு தொகை உபயோகிக்கபடாமல் எஞ்சியுள்ளது. |
| இ) ஆராய்ச்சிகளை ஊக்கப்படுத்துவதற்காக மீளாய்வாண்டின் போது பாதிடப்பட்ட மூலதன ஏற்பாடான ரூபா 25,000,000 தொகையில் ரூபா 554,266 தொகை மாத்திரமே பயன்பட்டிருந்தது. இதன் பிரகாரம் ரூபா 24,445,734 தொகையான ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்ததுடன் இது மொத்த ஏற்பாட்டில் 98சதவீதம் ஆகும். | ஆரய்ச்சிகளை ஊக்கப்படுத்துவதற்காக ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் மூலதன ஒதுக்கீட்டில் 10% ஒதுக்கிடு வைக்கப்பட்ட போதிலும், மீளாய்வாண்டின் போது முன்மொழியப்பட்ட ஆராச்சிகள் மேற்கொள்வதில் ஏற்பட்ட பின்னடைவால்/ ஏற்பாட்டில் சேமிப்பை காண முடிகிறது. எனினும் இவ் ஒதுக்கீடுகள் குறைபயன்பாட்டில் இருந்த நிலையான சொத்துக்களின் கீழ் பயன்படுத்தப்பட்டு |

| | |
|---|---|
| | வருகின்றது. |
| ஈ) மீளாய்வாண்டின் போது மாவட்ட செயலகம் "பதுளை" இனால் இழைய உற்பத்தி செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்ட ரூபா 3,323,000 தொகை பொது வைப்பு மூலதன கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருக்கும் போதிலும், 2015 மார்ச் 31ம் திகதி வரை செயற்றிட்டம் செயற்படுத்தபடவில்லை. | குறிப்பிட்ட திட்டத்திற்காக கொள்முதல் நடவடிக்கை மூலம் தேவையான பொருட்கள் கருவிகள் வாங்கும் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. மேலும் நான் இது தொடர்பாக மாவட்ட செயலாளருக்கு எதிர்காலத்தில் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் பற்றிய அறிக்கை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பேன். |

**4 சிக்கனமற்ற கொடுக்கல், வாங்கல்**

| | |
|---|---|
| மீளாய்வாண்டில் ஒவ்வொரு மாதமும் வெளிவாரி பாடநெறிகளில் இருந்து உழைத்த வருமானத்தில் ரூபா 10 இலட்சம் தொகையொன்று நடைமுறைக் கணக்கு இருந்த போதிலும் அது முதலீடு செய்யப்பட்டு வட்டியை உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நான் நிதியை நிரந்தர வைப்பில் முதலீடுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**4.5 விலைவற்றதும் குறைபயன்பாடுடையதுமான சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | |
|---|---|
| அ) 2010 யூன் 30ம் திகதி கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 322,560 பெறுமதியான 05 தீக்காப்பு பெட்டகங்கள் மீளாய்வாண்டின் டிசம்பர் 31இல் உள்ளவாறு பயன்பாட்டிற்கு எடுத்து கொள்ளப்படாது விளைவற்று காணப்பட்டன. | நான் இந்த அவதானிப்பை ஏற்றுகொள்கிறேன்.<br>மேலும் குறிப்பிட்ட வழங்குனரின் ஊடன்பாட்டுடன் தீக்காப்பு பெட்டங்களை கையளித்து இரும்பு பெட்டகங்களை பெறுவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றது |
| ஆ) 2012 ஆம் ஆண்டின் போது பொறியியல் வேலைதளத்திற்கான கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 14,060,480 | நான் இது சம்பந்தமாக தினைக்கள தலைவர் மற்றும் பீடாதிபதியிடமிருந்து ஆலோசனை பெற்று அதன் அடிப்படையில் உபகரணங்களை |

| | |
|---|---|
| பெறுமதியான 3-Axis CNC இயந்திரம் மீளாய்வாண்டின் டிசம்பர் 31ல் உள்ளவாறு பயன்பாட்டிற்கு எடுத்து கொள்ளப்படாது விளைவற்று காணப்பட்டது. | பயன்படுத்த ஆலோசனை வழங்கியுள்ளேன். மேலும் அவ்வுபகரணம் தற்போது பாவனையில் உள்ளதை அறியத்தருகிறேன். |
| இ) வெளிவாரி பாடநெறிப்பிரிவிற்கு ரூபா 1,117,933 பெறுமதியான நிலையான சொத்துக்கள் உயர்கல்வி அமைச்சின் “HECT” செயற்றிட்டத்தினூடாக வழங்கப்பட்டிருந்த போதிலும், அச் சொத்துக்கள் ஆக்கபூர்வமாக வெளிவாரிப்பாடநெறிப்பிரிவின் நோக்கங்களைக் நிறைவேற்றுவதற்கு பயன்படுத்தப்படாது இருந்தமை அவதானிக்கப்பட்டது. | பல்கலைக்கழக பிரதான களஞ்சியத்திற்கான<br><br>புதிய கட்டடம் கட்டப்பட்டு வருகின்றது. மேலும் தற்போது களஞ்சிய நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டு வருகின்ற கட்டடமானது வெளிவாரி பட்டப்படிப்பு பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ளது. வெளிவாரி பட்டப்படிப்பு சம்மந்தமான நடவடிக்கைகளுக்கு தேவையான தளபாடங்களை நிறுவ நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| ஈ) பல்கலைக்கழகத்தின் நிதிப்பிரிவின் நிர்வாக நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்காக 2013ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 222,768 பெறுமதியான மென்பொருள் தற்போது காசோலை அச்சிட்காக மாத்திரம் பயன்படுத்தப்படுகின்றமை காணக்கூடியதாக இருந்தது. | குறிப்பிட்ட மென்பொருளை அதன் கணக்கீட்டு பிரிவின் செயற்பாட்டில் காணப்படும் குறைபாடுகள் காரணமாக மேம்படுத்துவது கடினமாக உள்ளது.<br><br>அம்மென்பொருளை வழங்கிய நிறுவனத்திற்கு இது தொடர்பாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட குறைகள் நிவர்த்தி செய்யுமிடத்து பல்கலைக்கழக நிதிப் பிரிவின் செயற்பாடுகளை இலகுபடுத்த அம்மென்பொருள் பாவிக்கப்படும். |

**4.6 வெளிப்படையான மோசடிகள்**

| | |
|---|---|
| மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்ட பட்டமளிப்பு விழாவை புகைபடம் எடுப்பதற்காகவும், காணொளி படுத்துவதற்கும் உரிய வழங்குனர் தெரிவு செய்தல் தொடர்பாக கொள்வனவு வழிபாட்டின் கோவையின் 2.8.5, 5.2.1(அ), 6.3.2, 6.3.3, 6.3.3.1(அ) வழிகாட்டிற்கு முரனாக | பல்கலைக்கழகம் சேவைகளை வழங்க ஊக்குவிப்பு வழங்கியுள்ளது. சேவைகள் கொள்வனவானது மாணவர்களின் முன்னுரிமை தெரிவு அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. |

| | |
|---|---|
| நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், வழிகாட்டியின் 1.21இல் குறிப்பிட்ட நோக்கங்கள் மற்றும் வழிகாட்டியின் 1.4இல் குறிப்பிடப்பட்ட ஒழுங்கு விதி மீறப்பட்டிருந்தது. அவ்வாறே தெரிவு செய்யப்பட்ட வழங்குனரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த விலை விபரங்களின் பிரகாரம் 10”x12” அளவிலான புகைப்படம் ஒன்று ரூபாய் 100ஆக குறிப்பிட்டிருந்த போதிலும், பட்டதாரி அபேட்சகர்களுக்கு புகைப்படம் ஒன்று ரூபா 336 என்னும் தொகைக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது உறுதிபடுத்தப்பட்டது. அதன் பிரகாரம் ரூபா 104, 784 தொகை முறையற்ற விதத்தில் உழைப்பதற்கு பல்கலைக்கழகத்தினால் உதவி ஒத்தாசை வழங்கப்பட்டிருந்தது. மேலும் இது தொடர்பாக உரித்து மற்றும் உரிமை பல்கலைக்கழகத்தின் வசமிருந்த போதிலும், இந்த உரித்து தொடர்பாக பல்கலைக்கழக நிதியத்திற்கு எந்தவொரு அறவீடொன்றையும் பெற்றுக்கொள்வதற்று நடவடிக்கை எடுக்கபட்டிருக்கவில்லை. | |

**4.7 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| | |
|---|---|
| அ) 2008 ஆம் ஆண்டின் போது ஆடைக்கைத்தொழில் கட்டிடத்திற்காக ரூபா 41,247,644 தொகை செலவு செய்து நவீனமயப்பட்டிருந்த போதிலும், கூரையால் நீர் கசிவு ஏற்பட்ட காரணத்தினால் சிவிலிம் | ஆண்டுத் திட்டத்தில் உள்ள வரைவுகளில் உள்ள குறைகளினால் குறிப்பிட்ட திட்டத்தை நடைமுறைப்படுத்துவது சாத்தியம் இல்லை மேலும் அத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும். பொருட்டு ஒரு ஆலோசகா் நியமிக்கப்பட்டு குறித்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |

| | |
|---|---|
| சிதைவடைந்து காணப்பட்டதுடன், மேற்படி கட்டிடத்தின் கூரை மீளாய்வாண்டின் ஜனவரி – ஏப்ரல் காலப்பகுதியிலும் புணரமைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | |
| ஆ) நிர்மாண செயற்திட்டங்கள் தயாரிக்கப்பட்டதன் பின்னர் தேவையான அளவீட்டுப்பத்திரங்கள் (BOQ) தயாரிப்பதை சரிப்படுத்த இயலுமாக இருந்த போதிலும், தொடர்ந்தும் மத்திய பொறியியலாளர் உசாத்துணை பணியகத்தினால் (CECB) அளவீட்டுப் பத்திரங்கள் (BOQ) தயாரிக்கும் போது செலவின விடயங்களில் 50 சதவீதத்திலிருந்து 300 சதவீதம் வரை மதிப்பீடுகளில் உள்ளவறான பெறுமதிகளுக்கிடையே வேலைகளை நிறைவேற்றும் போது விலகல் அவதானிக்கப்பட்டன. | இது சம்மந்தமாக ஆலோசனை வழங்கும் நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் நியாயமான காரணம் இல்லாத விலகல்களுக்கு அனுமதி வழங்கலோ கொடுப்பனவோ மேற்படாத வண்ணம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| இ) 2010ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டு 2013 ஆம் ஆண்டின் போது வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டிய 12 நிர்மாண செயற்திட்டங்கள் மீளாய்வாண்டு வரையிலும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையால் மதிப்பிடப்பட்ட கிரயத்தை மிகைப்பதை குறைப்பது சிக்கலான விடயம் ஒன்றாக இருந்தது. | கிடைக்கப் பெற்ற நிதி ஒதுக்கீடுகளின் அடிப்படையில செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தபட்டு வருகின்றன. அத்தோடு அத்திட்டடங்களின் தேவையை பொறுத்தே அவை செயற்படுத்தபடுகின்றன. |

### 4.8 மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | |
|---|---|
| அ) மீளாய்வாண்டின் டிசம்பர் 31இல் உள்ளவாறு பல்கலைக்கழத்தின் அங்கீகரிக்கப்பட்ட கல்விசார் பதவியணியின் 213 பதவிகளில் 70 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் வெற்றிடம் தொடர்பான விளம்பரங்கள் பத்திகைகளில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. மேலும் விண்ணப்பதாரிகளின் தகமைகளை ஆய்வு செய்யும் பொருட்டு நேர்முகத்தேர்வு நடைமுறைப்படுத்தபட்டு வருகின்றன.<br><br>மேலும் இணைப் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பங்கள் கிடைக்க பெற்றுள்ளன. அவை சுற்றரிக்கை இல 916ற்கு ஏற்ப தகமைகளுக்கான ஆய்வு செய்யப்பட்டு கொண்டிருக்கின்றன.<br><br>மேலும் தேவைப்படும் விரிவுரையாளர் சேவைகளை பல்கலைக்கழக துறையில் இருக்கும் வெளிக்கள விரிவுரையாளர்கள் மூலம் பெறுவதோடு தற்காலிக விரிவுரையாளர்கள், தற்காலிக உதவி விரிவுரையாளர்களின் மூலமும் பெறப்படுகின்றது. |
| ஆ) 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகார சட்டத்தின் vi ஆம் பகுதியின் 33ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் நூலக பதவி 2006ம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை வெற்றிடமாக காணப்பட்டது. | நூலகர் பதவிக்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| இ) பதிவாளர் பதவி 2014 மார்ச் 12ம் திகதி முதல் வெற்றிடமாக காணப்பட்டதுடன், 1978இன் 16ம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகார சட்டத்தின் 37(1) பிரகாரம் அவ்வெற்றிடங்களை | 2014 ஜீலை 20 வெளியிடப்பட விளம்பரத்தின் அடிப்படையில் நடாத்தப்பட்ட நேர்முகத்தெரிவில் பதிவாளர் பதவிக்கு பொருத்தமான நபர் தெரிவு செய்ய முடியவில்லை. அதனால் மீண்டும் பதிவாளர் பதவிக்கு விளம்பரங்கள் வெளியிட |

| | |
|---|---|
| நிரப்புவதற்று பல்கலைகழகம் தவறியிருந்தது. | நிருவாக சபையினால் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. |
| ஈ) மீளாய்வு ஆண்டின் டிசம்பர் 31ல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட கல்விசாரா பதவியணியின் 113 பதவிகளில் 70 பதவிகளின் வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்கு தவறியிருந்தது. | பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் உள்ளெடுக்கப்பட்ட கொள்கை முடிவின் காரணமாக அலுவலக நிருவாக சேவைகள் வெற்றிடங்கள் நிரப்பபடாது பல்கலைக்கழகத்தால் தொழில்நுட்ப கல்லூரி பயிலுனர்களை கொண்டு உருவாக்கப்பட்ட செயற்பாட்டு உதவியாளர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.<br><br>மருந்தாளர், விடுதி காப்பாளர், கண்காணி மற்றும் கணணி உதவியாளர் பதவிளுக்கு தேவையான ஆட்சேர்ப்பு நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| உ) பல்கலைக்கழத்தில் 32 ஆய்வு கூடங்கள் காணப்பட்ட போதிலும், மீளாய்வாண்டில்அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் 12 பதவிகளில் 10 பதவிகளை பூர்த்தி செய்வதற்கு தவறியிருந்தது. | தொழில்நுட்ப ஊழியர் ஆட்சேர்ப்பு சம்பந்தமாக உள்ளக விண்ணப்பங்கள் கோரப்பட்ட போதிலும் கிடைக்கப்பெற்ற பதில்கள் குறைவென்பதால் சுற்றறிக்கை 876 இன் படி ஆட்சேர்ப்பு பெயர் பட்டியல் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| ஊ) 2002 ஜனவரி 8ஆம் திகதி 794 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆனைக்குழு சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுளள ஆகக்குறைந்த தகமைகளுக்கு முரனாண 2008 டிசம்பர் 5ம் திகதி UGC/HR/1/2/452 ஆம் இலக்க நியமன கடிதத்தின் பிரகாரம் சிரேஸ்ட உதவி பதிவாளர் பதவிக்காக ஆட்சேர்ப்பிற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | பல்கலைக்கழக சட்டம் பிரிவு 71 மற்றும் இல 72 நிபந்தனைகளின் படி சிரேஸ்ட உதவி பதிவாளர் நியமனம் தொடர்பான அதிகாரம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கே உள்ளது. குறிப்பிட்ட நியமனமானது பல்கலைக்கழக மானியங்கள் ஆனைக்குழுவினால் வழங்கப்பட்டது. பல்கலைக்கழகத்தால் அல்ல |
| எ) கல்விசார் பதவியணியினருக்குரிய 5 விரிவுரையாளர்களின் நியமனக் | பல்கலைக்கழகம் ஆரம்பிக்கபட்ட காலப்பகுதியில் பல்கலைக்கழக விரிவுரையாளர் |

| | |
|---|---|
| கடிதத்தின் பிரகாரம் நியமனத்தை நிரந்தரமாக்குவதற்கு நியமன திகதியிலிருந்து ஓராண்டு காலப்பகுதியில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய கற்றல்/ கற்பித்தல் முறைகள், திறன்கள் உட்பட ஊழியர் அபிவிருத்தி பயிற்சி பாடநெறி பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | குழாம் ஆரம்பகட்ட கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டதன் காரணமாக தாமதம் ஏற்பட்டது. மேலும் ஊழியர் அபிவிருத்தி நிலையம் ஸ்தாபிக்கபடாததன் காரணமாக அதைத் தொடர்ந்த காலப்பகுதியில் தேவையான திறன்களை அவர்களாகவே வளர்த்துக்கொண்டனர். |
| ஏ) 1982 ஏப்ரல் 6ஆம் திகதி 166ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங் ஆனைக்குழு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கல்விசார் பதவியணியினருக்கு விரிவுரையாளர்களை நியமிப்பதற்கு உரித்தாக நடாத்தப்படும் நேர்முகப்பரீட்சை குழுவின் அங்கத்தவராக பல்கலைக்கழகத்தின் பதிவாளர் இருந்தமையால் நான்கு விரிவுரையாளருக்குரிய நியமனம் செல்லுப்படியற்றதாக இருந்தது. | 1978 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டப்படி பல்கலைக்கழக பதிவாளர் ஆனவர் அலுவலக ரீதியாக பல்கலைக்கழக செனட் சபையினதும் நிர்வாக சபையினதும் செயலாளர் ஆவார். பதிவாளர் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட அலுவலர் அனைத்து நேர்முக தேர்வுகளிலும் செயலாளராக செயற்படுவார். இங்கு செயலாளர் என்ற பதம் குறிப்பிடப்படாமையே காரணம் ஆகும். |
| ஐ) பல்கலைக்கலகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவி அணியில் புத்தகக் கட்டுணர் பதவி ஒன்று அங்கீகரிக்கபடாதிருந்த போதிலும், 2014 யூலை 24ஆம் திகதி 638/2014 ஆம் இலக்க கொள்வனவு குழு தீர்மானத்தின் பிரகாரம் தற்போது பல்கலைகழகத்திற்கு சேவை வழங்கும் நிறுவனத்திலிருந்து புத்தக கட்டுணர் பதவிக்காக இரண்டு ஊழியர்களின் சேவை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | நான் ஒப்புக்கொள்கிறேன். பல்கலைக்கழக கனக்கீடுகளை குறிப்பிட்ட காலப்பகுதியில் வழங்குவதற்கான அவசர தேவை நிமிர்த்தம் இரண்டு பணியாளர்கள் புத்தக கட்டுணர் பதவிக்கு, பல்கலைக்கழகதிற்கு சேவை வழங்கி வந்த அபான்ஸ் நிறுவனம் மூலம் நியமிக்கப்பட்டனர். நிரந்தர புத்தக கட்டுணர்களை நியமிப்பது தொடர்பாக பத்திரிக்கையில் விளம்பரம் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழகம் ஆரம்பிக்கபட்ட காலப்பகுதியில் எடுக்கப்பட்ட கொள்கை முடிவின் பிரகாரம் கல்வி சாரா ஊழியர் சேவைகள் சேவை வழங்குநர்களிடம் இருந்து பெற்றுகொள்ளபடுகிறது. |

### 4.9 வாகனப்பயன்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | |
|---|---|
| வாகனத்திற்காக ஏற்படுத்தி கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கை பிரகாரம் மாதாந்தம் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட வேண்டிய கிலோ மீற்றர் அளவை விட குறைத்து ஓட்டத்தில் ஈடுபடுத்தும் கிலோ மீற்றர் அளவுக்கு கொடுப்பனவு செய்வதும் நிபந்தனை ஒன்றாகும். அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது 5 வாகனங்கள் தொடர்பாக ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படாத 29,897 கிலோ மீற்றர்களிற்கான ரூபா 914,878 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | மாதாந்த ஓட்டம் 3000km ஆக கருதி கேள்வி அறிவித்தல் கோரப்பட்டிருந்தது. இது சம்மந்தமாக எரிபொருள் செலவு, காப்புறுதி மற்றும் வாகன சாரதியின் சம்பளம் என்பன கருத்திற் கொள்ளப்பட்டது. அதே நேரத்தில் 3000km பாவனை இல்லாத நேரத்தில் பெறுநருக்கு நிதி இழப்பை ஏற்படுத்துவதால் அவ்வாறான நிலைமைகளுக்கு பயணிக்கும் கிலோ மீட்டர்களுக்கு வேறோரு கட்டண விபரம் பெறப்பட்டது. உண்மையில் இக் கட்டணமான எரிபொருள் செலவு தவி்ந்த வாகன சாரதி சம்பளம், மாதாந்த பாரமரிப்பு செலவு, காப்புறுதி மற்றும் பல.<br><br>அதே நேரம் மேலே குறிப்பிட்ட கட்டணங்கள் பெறப்பட்டது வருடத்தில் சில குறிப்பிட்ட மாதங்களில் 3000 km தூரம் பயணிப்பது இல்லை. ஒரு வருடத்தை எடுத்துக் கொண்டால் பரீட்சைகள் நடக்கும் மாதங்களிலும் சித்திரை மாதங்களிலும் குறைவான பயண தூரமே பதிவு செய்யப்பட்டுள்ளது.<br><br>அதே நேரம் அந்த வாகனங்களை மேற்குறிப்பிட்ட காலப்பகுதிகளில் 2500 km தூரம் ஓடுவதாக கருதி நீக்க முடியாது.<br><br>அதே நேரம் குறைவான தூர பயண பதிவு குழுவினா் வண்டி வாகனத்திற்கே பதிவு செய்யப்பட்டுள்ளது. சராசரியாக மாதாந்தம் 2000km இவ்வாகனத்திற்கு பதிவு செய்யப்படுகிறது. குறிப்பிட்ட சில |

| | |
|---|---|
| | மாதங்களில் இவ்வாகனத்திற்கு ஒதுக்கப்பட்ட செயற்பாடுகள் குறைவாக உள்ளது. இதன் காரணமாக மேற்குறிப்பிட்ட வேறுபாடு நிகழ்ந்திருக்கலாம் என அறியத்தருகிறேன். |

**05 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**ய. நிதிகூற்றுக்களை சமர்ப்பித்தல்**

| | |
|---|---|
| 2002 மே 24ஆம் திகதி பீஎப்/பீஈ.21 ஆம் இலக்க அரச நிதிச்சுற்றறிக்கையின் பிரகாரம் 2014 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுகள் கணக்காண்டு முடிவடைந்து 60நாட்களிற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுகள் 2015 மார்ச் 31ஆம் திகதியே கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | இந்த நிதி அறிக்கைகளை சமர்ப்பித்தல் ஆனது போதுமான அலுவலக உதவி ஊழியர்கள் இல்லாத காரணத்தல் தாமதமானது. நான் எதிர் காலத்தில் இத்தகைய தாமதத்தை தடுக்க நடவடிக்கை எடுப்பேன். |

**5.2 கூற்றிணைந்த திட்டம**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | |
|---|---|
| அ) 2014 - 2018 காலப்பகுதிற்குரிய கூட்டிணைந்த திட்டத்தில் மீளாய்வாண்டில் செயற்படுத்தப்பட வேண்டியிருந்த 21 செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | பெரும்பாலான திட்டமிடப்பட்டுள்ள கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேலும் அனைத்து திட்டங்களையும் செயற்படுத்துவதில் நடைமுறைச் சிக்கல்களுக்கு முகம் கொடுக்க வேண்டியதாகியுள்ளது. |
| ஆ) 2003 யூன் 02 ஆம் திகதி பீஜீடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.12 ஆம் பந்தியின் பிரகாரம் முன்னைய மூன்று ஆண்டுகளின் செயற்பாட்டு விளைவுகள் தொடர்பாக மீளாய்வொன்று கூட்டிணைந்த | திட்டங்கள் புதுப்பிக்கப்படும போது இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நான் நடவடிக்கை எடுப்பேன். |

| | |
|---|---|
| திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன், நிறைவேற்றப்பட வேண்டிய இலக்குகளின் நிதிப் பெறுமதிகள் காண்பிக்கப்பட்டிராமையால் செயல் முன்னேற்றத்தை மதிப்பிடக்கூடிய முறையில் கூட்டிணைந்த திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | |

**5.3 செயல் நடவடிக்கைத்திட்டம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | |
|---|---|
| அ) மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கை திட்டம் தொடர்பாக மேற்கொண்ட பரிசோதனையின் போது 2014 பெப்ரவரி 17ஆம் திகதி 1.2014 இலக்க அரச நிதிச்சுற்றுகையின் நான்காவது பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கை திட்டத்துக்கு நாலது வரையறுக்கப்பட்ட நிறுவகத்தின் ஒழுங்கமைப்பு கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் தற்போது உள்ள பதவியணியினர் தொடர்பான விபரங்கள் மற்றும் உள்ளக கணக்காய்வு திட்டம் என்பன உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | நான் இதை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பேன். |
| ஆ) மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பௌதீக செயல் முன்னேற்றத்தை அறவிடுவதற்காக செயலால் செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நான் இதை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பேன். |
| இ) கூட்டிணைந்த திட்டத்தினதும் செயல்நடவடிக்கைத் திட்டத்தினதும் பௌதீக முன்னேற்றத்தை | திட்டமிடப்பட்ட கூட்டங்கள் மூலம் நான் இதை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| அளவிடுவதற்காகவும் அதற்குரிய தீர்மானங்களை எடுப்பதற்காக தந்திரோபாய முகாமைத்துவ மற்றும் அபிவிருத்தி குழுவொன்று தாபிக்கப்பட்டிருந்த போதிலும் அக்குழு மாதாந்தம் கூடி செயல் முன்னேற்றம் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை | |

**5.4 கணக்காய்வு முகாமைத்துவ குழுகூட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | |
|---|---|
| அ) 2010 டிசம்பர் 17ம் திகதி 55 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை 15ம் பந்தியின் ஆண்டொன்றிக்கு ஆகக்குறைந்தது 4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்கள் கூட்டப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் 2 குழு கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டு இருந்தன. | குறிப்பிடபட்டவாறு பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |
| ஆ) தற்போது கொள்வனவு செய்யப்பட்டுவுள்ள கணனி கணக்கீட்டு முறைமையை நலாவது வரையாக செயற்படுத்துதல், கல்விசார பதவியினரை அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் கடமை கையளிப்பு கடிதங்கள் வழங்குதல், கணகாய்வு ஐயவினா பதிவேட்டை பராமரித்தல் மற்றும் கணகாய்வு ஐயவினாகளிற்கு பதிலளித்தல் போன்றவை தொடர்பாக 32 ஆவது கணக்காய்வு குழுதிட்டத்தின் போது எடுக்கப்பட்ட தீர்மானங்களை செயற்படுத்துவதை தாமதம் அவதானிக்கப்பட்டது. | குறைகளை நிவர்த்தி செய்வதன் மூலம் மேம்படுத்துவதற்கு குறிப்பிட்ட மென்பொருளை விநியோகித்த வழங்குனருக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது.<br><br>அனைத்து ஊழியர்களுக்கும் கடமை கையளிப்பு கடிதங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன்.<br><br>கணக்காய்வு ஐயவினா பதிவேடு பராமரிக்கப்பட்டு வருகின்றதோடு அதை மேம்படுத்த நடவடிக்கை எடுப்பேன். |

### 5.5 கொள்வனவு திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | |
|---|---|
| பல்கலைக்கழகத்திற்கு சொந்தமான இணையத்தளம் ஒன்று போதியளவு தகவல் தொழிநுட்ப வசதிகள் இருந்த போதிலும் கொள்வனவு வழிகாட்டி கோவையின் 9.8 வழிகாட்டியின் பிரகாரம் இலத்திரனியல் கொள்வனவு நடவடிக்கைகள் இலத்திரனியல் மார்க்கமாக செயற்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை | நான் இலத்திரனியல் கொள்முதல் நடவடிக்கையை மேம்படுத்த நடவடிக்கை எடுப்பேன். |

### 5.6 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | |
|---|---|
| அ) மதிபிடப்பட்ட செலவினம், உள்படியான செலவினத்துடன் ஒப்பிட்டு பார்கையில் 5 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளில் 13 சதவீதம் முதல் 61 சதவீதம் வரையான விலகளும் 7 மூலதன செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளில் 15 சதவீம் முதல் 91 சதவீதம் வரையான கருத்திற் கொள்ளப்’பட வேண்டிய விலகளும் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்க பூர்வமான முகாமைத்துவ கட்டுபாடு சாதகனமான பயன்படுத்தபட்டிராமை அவதானிக்கப்பட்டது. | 2014ம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் ஒதுக்கப்பட்ட மூலதன மற்றும் மீண்டெழும் செலவின ஒதுக்கீடுகள் விடுவிக்கப்படாததன் காரணமாக இந்த தாமதம் ஏற்பட்டது. |
| ஆ) மீளாய்வு ஆண்டின் பாதீட்டு மதிப்பீட்டில் ஊழியர் அபிவிருத்தி மற்றும் பட்டப்படிப்பு அங்கிகள் என்பவற்றை கொள்வனவு செய்வதற்கான மூலதன செலவினத்திற்காக ஏற்பாடு அங்கீகரித்து கொள்ளாமல் முறையோர் ரூபா 2,782,153 தொகை மற்றும் ரூபா 94,500 | இந்த கொள்முதல் ஆனது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பல்கலைக்கழக ஊழியர்கள் அபிவிருத்தி நிலையங்களிற்கு கொடுக்கப்பட்ட கூடுதல் ஒதுக்குதலை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டு |

| | |
|---|---|
| தொகையான செலவினமும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | வருகின்றன. |

## 5.7 தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள் தொடர்பான அவதானிப்புகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | |
|---|---|
| 2012 செப்டம்பர் 21ம் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் கணக்குழு கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் படி, கழிவு நீர் மீள் சுழற்சி செயற்றிட்டத்தினை புனரமைப்பதற்கு இது வரை பல்கழைக்கழகம் தவறியிருந்தது. | நாம் இப்போது நீர் மீள்சுழற்சி திட்டம் மறுசீரமைப்பு தொடர்பான வேலைத் திட்டடங்களை முன்னெடுக்க ஆரம்பித்துள்ளோம். |